கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

பக்கம் 05 புதுமைப் பெண் மரியாள்

பக்கம் 08 – 09 திருத்தந்தை பிரான்சிஸ்

பக்கம் 13 நம்பிக்கை ஆண்டின் நிறைவு




ஞான ஒளி
ஞான ஒளி GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

திருவருகைக் காலம்
மார்கழி 01

01.12.2013 - (01 மார்கழி, 2013 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 76 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : GO / GD / 53 / NEWS / 2013



# தேவ தாயாரே! ஆண்டவரிடம் எம்மை அழைத்துச் செல்லுமே

## மரியன்னை ஆண்டு பிரகடனம், கொழும்பு உயர் மறைமாவட்டம், கார்த்திகை 24

கார்த்திகை மாதம் 24ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் துணை ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர், துறவிகள் புடைசூழ மரியன்னை ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.

பிரகடன வழிபாட்டின்போது, பிரகனடப்படுத்தலின் பின்னர் செபமாலை செபிக்கப்பட்டு, நற்செய்தியின் பின்னர், கர்தினால் ஆண்டகையால் மறையுரை நிகழ்த்தப்பட்டது. மறையுரையின் பின்னர் நற்கருணை ஆசீர்வாதமும் வழங்கப்பட்டு பிரகடன வைபவம் இனிதே நிறை -வேறியது.

மறையுரையில் மரியன்னை ஆண்டின் முக்கியத்துவம், கல்வாரி மலையில் கொளுத்தும் வெயில் பொழுதில் சிலுவையில் மூன்று ஆணிகளில் தொங்கிக் கொண்டிருந்த இயேசு தமது அன்னையாகிய மரியாளை தன் அன்பு சீடருக்கு அளித்ததன் ஊடாக முழு திருச்சபைக்கும் தாயாக தந்துள்ளார் என்பதை மேற்கோள்காட்டி அன்னையின் பிரசன்னம் இறையன்பின் உடனிருப்பை எமக்கு வெளிக்காட்டும் பிரசன்னம் என்று தனது விசேட மறையுரையில் குறிப்பிட்டார். சிங்கள மொழியில் இடம் பெற்ற இம் மறையுரையை தமிழில் அழகுற மொழிபெயர்த்து துணை ஆயர் இம்மானுவேல் ஆண்டகையால் நிகழ்த்தப்பட்டது.

# கிறிஸ்துவின் அன்பை மற்றவர்களோடு பகிர்வதே கிறிஸ்மஸ்



## கர்தினால் ஆண்டகையின் நத்தார் வேண்டுகோள்

கொழும்பு உயர் மறைமாவட்ட குருக்கள், மற்றும் பொதுநிலையினர் இவ்வருட நத்தாரை சிறப்பிக்கும் முகமாக வடக்கில் பல கஷ்டங்கள், நெருக்கடிகள், இடம் பெயர்வுகள் மற்றும் பயத்தின் மத்தியில் வாழும் மக்களை சென்று பார்வையிட்டு அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளையும் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் நத்தாரின் உண்மையான அர்த்தம் அன்பாகும். அதேபோல் கிறிஸ்துவும், அவருடைய அளவில்லாத அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள தரும் சந்தர்ப்பமாகும். இதனடிப்படையில் உங்களது உதவிகளை வடக்கில் உள்ள துன்புறும் மக்களுக்கு செய்து நீதியுடனான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும். மறைமாவட்ட ரீதியில் விசேட கடித உறை ஒன்றை செத்சரண அமைப்பினால் பங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருவருகைக் காலத்தில் ஏதாவதொரு ஞாயிற்றுக்கிழமையில் சேகரிக்கப்படும் பண உதவிகளை மறைமாவட்ட பொருளாளர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்

அருட்பணி. றொகான் டி அல்விஸ்

செத்சரண இயக்குனர்

## வாழ்த்துகிறோம்



கொழும்பு உயர் மறைமாவட்ட முன்னாள் பேராயர்களான அதிமேதகு நிக்லஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகை, தனது பெயர் கொண்ட திருநாளையும் பிறந்த தினத்தையும் (மார்கழி - 06), அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை தனது பிறந்ததினத்தையும் (மார்கழி 12) கொண்டாடுகின்றனர்.



இவர்களுக்கு ஞான ஒளியின் வாழ்த்துக்கள்

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தால் ஒழுங்கு செய்யப்படும்

## நத்தார் குடில் போட்டி



விசுவாச உயிரூட்டல் தூதுப்பணி, இளம் கிறிஸ்தவ மாணவர் சங்கம் மற்றும் இயேசுவின் இளைஞர்கள் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்யும் இப்போட்டியானது றாகமை, புனிதர்களான பேதுருவானவர் மற்றும் பவுல் அடிகளார் தேவாலய முன்றலில் மார்கழி மாதம் 14ஆம் 15ஆம் திகதிகளில் “இன்று இயேசுநாதர் எம் மத்தியில் பிறந்தால்” என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது.

போட்டியாளர்கள் இரு குழுக்களில் அதாவது 16 வயதுக்கு மேல், மற்றும் 16 வயதில் இருந்து கீழுள்ளவர்கள் என பங்குபற்றலாம். கொழும்பு உயர் மறைமாவட்ட பங்குகளில் இருந்து குழுக்களோ, தனிநபர்களோ பங்குபற்றலாம். விண்ணப்பப்படிவங்கள் கார்த்திகை 25ஆம் திகதியிலிருந்து பேராயர் இல்லத்தில் அமைந்துள்ள திருவழிபாட்டு அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இவ்விண்ணப்பப்படிவங் களைப் பூர்த்தி செய்து மார்கழி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கவும், அத்தோடு பங்குத்தந்தையின் அனுமதிக் கடிதம் மிகவும் முக்கியமானது. நன்கு தீமானிக்கப்பட்டு கொழும்பு

தொடர்ச்சி 15ம் பக்கம்

## நாயககந்தை பங்கின் சமாதானப் பணி

**நாயககந்தை காணிக்கை மாதா ஆலய பங்கு மக்கள்,** முல்லைத்தீவில் கூளாம்புறிப்பு எனும் ஊரில் அமைந்துள்ள புனித சூசையப்பர் பங்கில் வசிக்கும் சுமார் 300 குடும்பங்களை



வருகின்ற மார்கழி மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் சந்தித்து அவர்களுக்கு ஒரு நாள் மருத்துவ முகாமும், பகலுணவும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதோடு, ஒவ்வொரு குடும்பங்களுக்கும் அவசியமான சமயலறை உபகரணங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள், உலர் உணவுப்பொருட்கள் மற்றும் வீட்டுப்பாவணைப் பொருட்கள் அடங்கிய பரிசுப் பொதிகளையும் வழங்கவுள்ளனர். அத்தோடு சிறப்பாக கூளாம்புறிப்பில் தேவாலயம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல்லையும் வைக்க உள்ளனர்.

இச் சமாதானப் பணியானது வடக்கிற்கும் தெற்கிற்குமிடையில் நம்பிக்கையையும் நட்புறவையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமையும் என நாயககந்தை காணிக்கை மாதா ஆலய பங்குத்தந்தை அருட் பணி. மகேந்திர குணதிலக்க அவர்கள் கூறியுள்ளார். கூளாம்புறிப்பு புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. கே. வின்சன் அடிகளார்

தொடர்ச்சி 15ம் பக்கம்

## “நற்செய்தியின் மகிழ்ச்சி” Evangelii Gaudium




### திருத்தந்தையின் முதல் மறைத்தூது மறையுரை நூல்

'Evangelii Gaudium" அதாவது “நற்செய்தியின் மகிழ்ச்சி” என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் முதல் “மறைத் தூது அறிவுரை” ஏட்டை கடந்த செவ்வாயன்று நிருபர் கூட்டத்தில் வெளியிட்டது திருச்சபை. கடந்த எட்டு மாதங்களில் தான் வழங்கிய மறையுரைகள், உரைகள் நேர்காணல்கள் ஆகியவற்றில் முன்னுரிமை கொடுத்த அனைத்தையும் பரந்த அளவில் இந்த மறைத்தூது அறிவுரை ஏட்டில் ஒன்றிணைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

புறக்கணிப்பு, உலகமயம், வருவாயில் மாபெரும் இடைவெளிகள் ஆகியவை நிறைந்த உலகில் நற்செய்தி அறிவிப்பு ஆர்வத்தை...

தொடர்ச்சி 15ம் பக்கம்

ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும் (திபா 85)

# CHOGM



பொதுநலவாய நாட்டுத் தலைவர்களின் மாநாட்டில் பங்கு பற்றிய கத்தோலிக்க தலைவர்கள் மற்றம் பிரதிநிதிகளுக்கான திருப்பலிகள் பொறளை சகல புனித வளான் தேவாலயத்தில் கர்தினால் ஆண்டகையில் தலைமையிலும், பம்பலப்பிட்டிய மரியாள் ஆலயத்தில் பாப்பரசரின் பிரதிநிதியின் தலைமையிலும் இடம் பெற்றன.

சகல புனித வளனார் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் மறையுரையாற்றிய கர்தினால் சமாதானத்திற்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார்.

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

(மார்கழி 01)



கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் மூன்று பத்திரிகைகளிலும் கார்ட்டூன் மூலம் தன் சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்ற திரு கெமிலஸ் அவர்கள் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். எல்லாம் வல்ல இறைவன் தனது ஆசீராலும், பாதுகாப்பிலும் வழி நடத்தி மேலும் அவரது பணி சிறக்கவும் வேண்டுமென்று ஞான வாழ்த்துக்களை கூறி நிற்கின்றது.

## புத்தக மலிவு விற்பனை



தேசிய மறைக்கல்வி நிலைய வருடாந்த புத்தக மலிவு விற்பனை கார்த்திகை மாதம் 28ஆம் திகதியிலிருந்து மார்கழி 20ஆம் திகதி வரை காலை 9.30 மணியிலிருந்து பி. ப 3.00 மணி வரை நடாத்தப்படும். உங்களுக்குத் தேவையான கத்தோலிக்க மறைநூல், சஞ்சிகை ஆகியன தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்

(குறிப்பு : ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்)

## வாழ்த்துகிறோம்



அருட்தந்தை சாள்ஸ் ஹேவாவசம் அடிகளாரை காலி மறைமாவட்டத்தில் புதிய குரு முதல்வராக அம்மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை நியமித்துள்ளார். இந்நியமனம் கார்த்திகை மாதம் 19ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.



புனித ஆசீர்வாதப்பர் சபையின் (சில்வெஸ்டோ பெனடிக்டின்) இலங்கைக்கான தலைமைத் துறவியாக அருட்தந்தை ஷாம் இந்ர ஜயவர்தன அடிகளார் தெரிவாகியுள்ளார். அவரோடு சேர்ந்து ஆலோசகர்களாக அருட்தந்தையர்கள் அன்சலம் பொன்சேக்கா, யோவான் சவரிமுத்து, யூகின் டீ சில்வா, கிளமன்ட் ஞானி பிரகாசம் அடிகளார்கள் தெரிவாகியுள்ளனர்.

**இவர்களது பணிவாழ்வு சிறக்க எமது செப வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.**

## சாய்ந்தது மறைபணி மரமொன்று

"சவால்கள் நிறைந்தது மறைபணி வாழ்வு, சவாலை வெல்ல இறைவனுடன் உறவாடு, உரையாடு" என்று அன்று மறைமாவட்டங்கள் தோறும் ஓங்கி ஒலித்த ஓர் கம்பீரக் குரலானது 2013ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ஆம் நாள் ஓய்ந்தது.

அருட்சகோதரி பெனடிக்டா பெற்றோருக்கு முதற் கனியாக உதித்து ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டனர். இருப்பினும் ஆண்டவரின் பார்வை இவர் மேல் பதிந்தது. ஆசிரியப் பணியை இடைநிறுத்திய சகோதரி பெற்றோரின் விருப்புடன் இறைசுவட்டில் நடைபயின்றார். தம் முதற் கனியை முழுமுனதுடன் இறைவனுக்களித்து இறையாசீரை பெற்றுக்கொண்டனர் சகோதரியின் பெற்றோர். கல்வியில் சிகரத்தைத் தொட்டுவிட்டு ஓர் அருட் சகோதரிகயாக மீண்டும் தன் வாழ்வை ஆசிரியப் பணியில் இணைத்துக்கொண்டார். பல பட்டங்கள் பெற்று மறைபணிவானில் பறந்தார். ஆசிரியப் பணியுடன் சேர்ந்து கொழும்பு மறைமாவட்ட மறைபணி நிலையத்தில் தமிழ் பிரிவில் இணை இயக்குநராகவும் பணியாற்றினார். இக்காலக்கட்டத்தில்தான் இவர் பல மறைமாவட்டங்களுக்குச் சென்று தன்னுள் உள்ள திறமைகளைப் பயன்படுத்தி பல மறையாசிரியர் கருத்தரங்குகளை நடத்தினார். அவரினால் பயன்பெற்றோர் பலர் இன்று அவர் நாமங்கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.சபையிலும் கூட தலைமைத்துவப் பண்பை தன் வாழ்வினில் பல இடங்களில் குழுமத்தலைவியாகவும், மாகாணத் -தலைவியாகவும் தெரிவு செய்யப் பட்டு தன் அன்பு அரவணைப்பினால் ஏனைய அருட்சகோதரிகளை தன் வயப்படுத்தினார். வழிநடத்தினார். அன்பு, பண்பு, தலைமைத்துவம் இறைவிருப்பை நிறைவேற்றல், எல்லாருக்கும் எல்லாமாக இருப்பது, எவ்வேளையிலும் இறைவனுக்காய் தன்னை அர்ப்பணித்தல் போன்ற நற்பண்புகளை இவரது வாழ்வில் நாம் கண்கூடாகக் காண முடிந்தது.

நாம் வாழ்ந்து வரலாறு படைப்பது முக்கியமல்ல, வாழ்ந்த வாழ்வுக்குச் சான்றாக பல வித்துக்களை வையகம்

வாழ்ந்தீர் வையகம் தனில்
வித்திட்டீர் உம் பண்புகளை
விருட்சமும் சாய்ந்தது
விதைகளும் வளர்ந்து மரமாகின்றது
வையகம் இளைப்பாறியது அதன் நிழலில்
இறைவான் வீட்டில் வாழ்ந்திட
இறைபதம் வேண்டுகின்றோம்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம்

தொகுப்பு : அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்




மொழி என்பது வெறும் ஒலி மட்டும் அல்ல! மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு சாதனம் மட்டுமல்ல! மொழியைப்பற்றி பேசுகின்றபோது, "மொழி என்பது எண்ணங்களை எடுத்துச்செல்லும் ஊடகம்தானே" என்று சிலர் சாதாரணமாகச் சொல்லலாம். ஆனால் மொழியின் பரிமாணங்கள் பரந்துபட்டது. மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம்! மொழி இல்லையேல் ஒரு இனம் இல்லை. மொழி இல்லையேல் ஒரு இனத்தின் இலக்கியங்கள் இல்லை, கலைகள் இல்லை, பண்பாடு இல்லை, மரபுகள் இல்லை, சமயங்கள் இல்லை. ஒரு இனத்தின் இலக்கியங்களை, கலைகளை, பண்பாடுகளை, சமய நம்பிக்கைகளை தாங்கி நிற்பது மொழி.

தொடர்ச்சி 14ம் பக்கம்

## கரையோரப் பிரதேசப் பகுதிகளில் பணியாற்றும் அருட்தந்தையர்கட்கு விடுக்கும் தயவான வேண்டுகோள்

எனது அபிப்பிராயத்தின் படி மீனவ மக்களின் வாழ்க்கையை அவதானிக்கும்போது, இன்று அவர்கள் தமது சமூகத்தின் பெரும் தன்மைப் பற்றி அதிக விழிப்புணர்ச்சியுடைவர்களாக விளங்குவதை உணர்கிறேன். அவர்களுடைய நியாயப்பூர்வமான தேவைகள், விருப்புகள், வெறுப்புகள், வாழ்க்கைப் போராட்டங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை நோக்கும்போது அச்சமூகத்தின் சார்பில் பங்குத்தந்தையர்களாகிய தங்கள் முன் சில ஆலோசனைகளை வைக்க விரும்புகின்றேன். ஆன்மீக நட்புறவு மன்பான்மையுடன் அவற்றில் தங்கள் கவனத்தைச் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1. தங்கள் ஏழை மீனவ மக்களுக்காக எப்போதும் அவர்கள் சார்பாக செயற்படுவது சிறந்ததாகும்.
2. மீனவ மக்கள் சமுதாயத்தில் ஓர் விசேட பிரிவினராகும். அவர்களுக்கே உரித்தான வரலாறும், கலாச்சாரமும் சமூக மனப்பாங்கும் உடையவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.
3. அவர்களுடைய வாழ்க்கைக்குப் பாதகமாகச் செயற்படும் குழுக்கள் பற்றி அறிந்துகொள்ளுதல் / அவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பவர்களை இனம் காணுதல் / அவர்கள் நீதியும் சமத்துவமும் உடைய ஒரு வாழ்க்கையை அனுபவிக்க இடையூறாக இருப்பவர்கள் யாரென அறிந்து கொள்ளுதல் / போன்ற பிரதான விடயங்களில் கவனம் செலுத்துவது நன்மை பயக்கும் செயலாகும்.
4. அவர்களுடைய தேவைகள், அபிலாசைகள், விருப்புக்கள், எதிர்பார்ப்புக்கள் வாழ்க்கைப் போராட்டங்கள், வெற்றிகள் தோல்விகள் மட்டில் பங்குத் தந்தையர்களாகத் தாங்கள் செவிமடுப்பதை அவர்கள் வரவேற்கின்றனர்.
5. கல்வியின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணரப் பண்ணுங்கள் (விசேடமாகப் பிள்ளைகளுக்கு, இளைஞர், யுவதிகளுக்கு, வளர்ந்தோருக்கு)
6. தொண்டர் சங்கங்கள் உருவாக்குவதன் மூலம் (பிள்ளைகள், இளைஞர், வளர்ந்தோர்) தமது தேவைகளைத் தாமே நிறைவு செய்து கொள்ளக்கூடிய நிலைமையை உருவாக்கலாம். அதனால் தாங்களாகவே தமது சமூகத்தை நல்ல முறையில் கட்டியெழுப்ப அவர்களுக்கு முடியுமாகும்.
7. மீனவ சமூகத்தினுள்ளேயே தலைவர்களைத் தேர்ந்தெடுத்துத் தலைமைத்துவத்திற்கு அவர்களைப் பயிற்றுவிப்பதால், அவர்களைத் தம் சமூகத்திற்கும், பாரிய சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் பணிபுரிபவர்களாக்கலாம்.
8. அவர்களுக்குத் திருவிவிலியம் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுக்கவும் அவர்களின் குடும்பங்களில் திருவிவிலியத்தை வாசிக்கவும், செபிக்கவும், இறைவார்த்தையின் படி வாழவும் அருளடையாளங்கள் மூலம் உத்தானமான கிறிஸ்துவை அனுபவித்தறியவும் வழிகாட்டுங்கள்.
9. திருமண உடன்படிக்கையில் உட்பட இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு, மறை அறிவு, திருமண வாழ்வின் மேன்மை பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒழுங்குத் திட்டங்களை அழைத்துக் கொள்ளுங்கள்.
10. தொழிற்பயிற்சிகளை இளைஞர் யுவதிகளுக்கு பெற்றுக்கொடுக்க முயற்சியுங்கள்.
11. மீனவ சமூகத்தினுள்ளே வாழும், தகுதிவாய்ந்தவர்களும், கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட இறைதந்தையின் எல்லையற்ற அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளக கூடியவர்களுமான நபர்களை இனம் கண்டு கொள்ளுங்கள்.
12. நிதி பரிபாலனம் தொடர்பாகத் தெளிவாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் செயற்படுவதன் மூலம் மீனவ மக்களின் நம்பிக்கையை வென்ற, நேர்மை, நம்பத்தகு தன்மையைப் பேணுதல், ஒரு குருவுக்குப் பிரதானமாகும். நிதி தொடர்பான குழுக்களைக் கிராமத்திலும் (ஆலயத்திலும்) பங்கிலும் உருவாக்கி, அதில் ஓர் அங்கத்தவராகச் செயற்படவும்.
13. தங்கள் தேசத்தையும், சக்தியையும் தூய ஊக்கத்தையும் போதிப்பதிலும், கற்பிப்பதிலும், இறைமக்களுக்கு வழிகாட்டுவதிலும் அர்ப்பணியுங்கள்.
14. பரஸ்பர அன்பும், நம்பிக்கையும், பிறர் நல சேவை மனப்பாங்கும் கொண்ட கிறிஸ்தவ குழுக்களை உருவாக்குங்கள்.

மேற்கூறப்பட்ட ஆலோசனைகளை நிறைவேற்றுவதில் தேவைகள் ஏற்படின், பங்குத் தந்தையர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**அருட்தந்தை இம்மானுவேல் பர்னாந்து அ.ம.தி.**
**அதிபர்**
**தெவ் அறன**
**நற்செய்திப் பணி ஊக்குவிப்பு அகம்**
**பத்தண்டுவன (பொள்வத்த்) மினுவன்கொட.**

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
01 மார்கழி
மாதம், 2013 ஞாயிற்றுக்கிழமை.

## நான் என்ற நிலைமாறி நாம் என்ற உணர்வோடு இருப்பதை பகிர்ந்து இயேசுவை வரவேற்போம். பகிர்ந்து வாழ்தலில் இருக்கும் சுகமும், சந்தோஷமும் தனிதான்.

இன்று பரிசுத்த திருச்சபையானது புதிய திருவழிபாட்டு ஆண்டில் கால்பதிக்கின்றது. அத்துடன் திருவருகைக்காலமும் இன்று ஆரம்பமாகின்றது. திருவருகை என்றால் என்ன? ‘திரு’ என்பது ‘கடவுள்’ என பொருள்படும். அதாவது கடவுளின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் காலமாகும். சாதாரணமாக மனித வாழ்க்கையில் பல கொண்டாட்டங்கள் வருவதுண்டு. பிறந்தநாள், திருமணநாள், திருமுழுக்குநாள், விருந்தினர் வருகை.... இவ்வாறாக அநேக கொண்டாட்டங்களை கூறிக்கொண்டே போகலாம். இவ்வாறான கொண்டாட்டங்களுக்கு நாம் செய்யும் ஆயத்தங்களும், ஆரவாரங்களும் எமது பொருளாதார நிலைமையை மிஞ்சிவிடும் அளவுக்கு எமது கொண்டாட்டங்கள் அமைந்து விடுகின்றன. ஆனால் நமது கடவுளாகிய இயேசுக்கிறிஸ்துவின் வருகைக்காக நாம் செய்யவிருக்கும் முன் ஆயத்தங்களும் ஆரவாரங்களும் என்னவென்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

இயேசுக்கிறிஸ்துவை உள்ளத்தில் வரவேற்க நாம் உள ஆயத்தமும், ஆன்ம ஆயத்தமும் பெற வேண்டும். இது கட்டாயத் தேவையும் அவசியமுமானது. உள ஆயத்தத்திற்கு முதலில் நாம் உள்ளத்திலிருந்து வெறுமையாக வேண்டும். ஒரு பாத்திரம் வெறுமையாகவும், திறந்த நிலையிலும் இருந்தால் தான் அப்பாத்திரத்தை தண்ணீரால் நிரப்ப முடியும். எமது உள்ளத்தை நிரப்பியிருக்கும் பொறாமை, கோபம், வைராக்கியம் போன்ற இறை அன்பை தகர்த்தெறியச் செய்பவற்றை உள்ளத்திலிருந்து அகற்றிவிடுவோம். இழந்த இறை அன்பையும், இறை அருளையும் நல்லதொரு ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பெற்று புத்துணர்வு பெற்றிடுவோம். வருடத்திற்கு ஒரு முறையேனும் நல்ல ஒப்புரவு அருளடையாளத்தை பெறவேண்டும் என்பது எமது கத்தோலிக்கத் திருச்சபையின் கட்டளைகளில் ஒன்று என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும். நாம் புத்துணர்வும், புதுவாழ்வும் பெற்றால்தான் அதனை எம்மை ஆள இருப்பவர்களுக்கு கொடுத்து பகிர முடியும்.

எமக்குத் தரப்பட்டிருக்கும் நான்கு வாரங்களிலும் தேவையற்ற வேறு வேறு ஆயத்தங்களுக்கு முதலிடம் தராது, அமைதியான முறையில் இயேசுவின் வருகைக்காக காத்திருப்போம். நான் என்ற நிலைமாறி நாம் என்ற உணர்வோடு இருப்பதை பகிர்ந்து இயேசுவை வரவேற்போம். பகிர்ந்து வாழ்தலில் இருக்கும் சுகமும், சந்தோஷமும் தனிதான். நம்மால் செய்ய முடிந்ததை மறுக்காமல், தயங்காமல், சந்தோஷமாக செய்தாலே மனநிறைவு கிடைத்துவிடும். அதுபோல் சில தேவைகளை எம்மால் செய்யவே இயலாது. அதற்காக கவலைப்படவோ, கலங்கவோ தேவையில்லை. இதற்காக நம்மால் செய்ய முடிந்ததையும் செய்யாமல் விட்டுவிட்டால் எம்முள்ளத்தில் இயேசு பிறப்பாரா?

மழை நீரானது பள்ளத்தை நோக்கி ஓடுவதுபோல் வெறுமையான உள்ளத்தில்தான் இறை அருளும் ஊற்றெடுக்கும். எனவே உள்ளத்தை வெறுமையாக்கி ஆண்டவரை மட்டும் உள்ளத்தில் வரவேற்போம்

இறையாசீருடன்
ஆசிரியர்




இவ்வருடம் மார்கழி 1ஆம் திகதியிலிருந்து திருச்சபையானது திருவருகைக் காலத்தைத் தொடங்குகின்றது. கிறிஸ்துவின் பிறப்பு விழாவுக்கு நம்மை தகுந்த விதத்தில் தயாரித்துக் கொள்வதற்காக இக்காலத்தை ஒவ்வொரு ஆண்டும் திருச்சபை அறிவிக்கின்றது. திருச்சபையின் திருவழிபாட்டு காலம், மூன்று ஆண்டுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. திருவருகைக் காலத்தின் முதலாவது ஞாயிறு புதிய திருவழிபாட்டு ஆண்டு தொடங்குகின்றது. இந்த வகையில் இவ்வாண்டு மார்கழி 1ஆம் திகதி தொடங்குகின்றது திருவருகைக் காலம் என்பது இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவதற்காக நம்மைத் தயாரித்துக் கொள்ள அழைக்கும் காலம். அதுமட்டுமல்ல உன்னதத்தில் கடவுளின் வலப்புறத்தில் மகிமையுடன் அமர்ந்திருக்கும் இறைமகன் இயேசு மானிடருக்கு நீதி வழங்குவதற்காக வரும்போது, அவரைச் சந்திப்பதற்காக நம்மைத் தயாரித்துக்கொள்ள அழைப்பு விடுக்கும் காலம். இயேசு மீண்டும் ஒரு மனிதக் குழந்தையாக இவ்வுலகில் தோன்றப் போவதில்லை என்பது நம் விசுவாசம் கற்றுத்தரும் பாடம். ஆனால் அவரது பிரசன்னத்தை அவரது பிறப்பாக நம் உள்ளங்களில் நாம் உணர்ந்துகொள்ளலாம். இயேசுவின் பிரசன்னம் நம் உள்ளங்களில்

> **திருவருகைக் காலம் என்பது இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவதற்காக நம்மைத் தயாரித்துக் கொள்ள அழைக்கும் காலம்.**

உணரப்படுகின்றபோது அவர் நம்மில் பிறந்திருக்கிறார் என்று நாம் உணர முடியும். இயேசுவின் பிரசன்னத்தை நாம் திருவருகைக் காலத்தில் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். “இம்மானுவேல்” இயேசு (மத் 1:23) நம்முடன் எப்போதும் இருக்கிறார். இரண்டு, மூன்று பேர் இயேசுவின் பெயரின் பொருட்டு கூடியிருக்கும் போது அங்கே அவர் இருக்கிறார் (மத் 18:20) நாம் என்றும் கடவுளுடைய கோவில், நம் உடல் தூய ஆவி தங்கும் கோவில் என்றும், இயேசு நம் உள்ளக் கதவினைத் தொடர்ந்து தட்டிக் கொண்டிருக்கிறார் என்றும் நம் உள்ளத்தை அவருக்குத் திறந்தால்தான் அவர் உள்ளே வந்து நம்முடன் தங்குவார் (தி.வெ 3:20) என்றும் திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ளது.

திருவருகைக் காலத்தில் மரியன்னை ஆண்டை தொடங்கி இருக்கும் நாம் இயேசுவின் பிரசன்னத்தை நம் உள்ளங்களில் உணர்ந்து மரியாளைப் போல். (லூக் 2:19,51) இறைவார்த்தையை நம் உள்ளங்களில் இருத்தி விசுவாசத்தில் நிறைந்திருந்து “உமது சித்தத்தின்படியே ஆகட்டும்” என்ற மரியன்னையின் தாழ்மையை நாம் எமது வாழ்க்கையிலும் ஏற்றுக்கொண்டால் இயேசுவின் பிறப்பின் பிரசன்னத்தை நாம் உணர்ந்து வாழ முடியும். மேலும் திருவருகைக் காலத்தின்போது மாட்சியுடனும், வல்லமையுடனும் நம்மிடம் திரும்பி வரும் “மானிட மகன்” இயேசுவை மகிழ்ச்சியுடனும் மனத் துணிவுடனும் சந்திப்பதற்கு நாம் நம்மை தயாரிக்க வேண்டும். இயேசுவின் கட்டளைகளை சிரமேற்கொண்டு அவர் காட்டியுள்ள வழியில் நாம் நடப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். ஆகவே நம் மனசாட்சியை சீர்ப்படுத்தி நம் வாழ்க்கை முறையை செப்பனிட்டு இயேசுவிடம் சரணடைந்து அவரிடமிருந்து வெளிப்படும் அருளுக்காகவும், அன்புக்காகவும் நம் உள்ளங்களைத் திறந்து வாழ இந்த திருவருகைக் காலத்தை பயன்படுத்திக் கொள்வோமாக.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இளைஞர்களின் வழிகாட்டி தோபியா ~ 04

## குடும்பச் சண்டை



இளையோர் பக்கம்

அங்கம் - 47

ஒருநாள் அன்னா தன் நெய்தல் வேலைப்பாட்டை முடித்து, முதலாளியிடம் அனுப்பி வைத்தார். அம்முதலாளி அவரின் வேலைக்குரிய கூலியைக் கொடுத்து, சமைத்து உண்பதற்கு ஆட்டுக்குட்டி ஒன்றையும் பரிசாகக் கொடுத்தார். அன்னா ஆட்டுக்குட்டியுடன் வீடு திரும்புகிறார். ஆட்டுக்குட்டியின் கதறலைக் கேட்ட தோபித்து, அது திருடிய ஆடாக இருந்திருக்க வேண்டுமென்று எண்ணி அன்னாவுடன் வாய்ச்சண்டைப் போடுகிறார். வயிற்றுப் பசிக்காகவும், வாய் ருசிக்காகவும் பாவம் செய்வது தவறு என்று சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் அன்னா அது தன் முதலாளி பரிசாகத் தந்தது என்று கூறுகிறார். உண்மையை அறியாத தோபியாவின் தந்தை தோபித்துவால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய குடும்ப வறுமை தன் மனைவி அன்னாவை இப்படிப்பட்ட இழிவான செயலைச் செய்யத் தூண்டிவிட்டதே என்று மனம் வெதும்பினார். தொடர்ந்து வாய்த்தகராறு செய்தார். அமைதியாயிருந்த வீட்டில் மெல்ல மெல்ல பூகம்பம் வெடிக்க ஆரம்பித்தது.

அன்னா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தன் கணவன் தன்னை புரிந்துகொள்ளவில்லையே என எண்ணி, கடுமையான சொற்களால் தகராறு செய்கிறார், **“உம்முடைய தருமங்கள் எங்கே? நற்செயல்கள் எங்கே? உம்முடை குணம் இப்பொழுது நன்றாகவே புலப்படுகின்றது!” (தோபி 2:14)** என்றார். தன் கணவன் தன்னை நம்ப மறுத்தது, தன்னைத் திருடி எனக் குற்றம் சாட்டுவதை அன்னாவால் ஏற்க முடியவில்லை. எனவேதான் தோபித்தின் நல்ல பண்பையே கேள்விக்கு உட்படுத்துகிறார்.

இளைஞர் தோபியா இத்தக -ராறை பார்த்திருக்க வேண்டும். தந்தை தன் தாயைக் கண்டிப்பதும், தாய் தன் தந்தையின் புரிந்துக்கொள்ள முடியாத பண்பைக் கண்டித்து, அவர் செய்த தர்மமும் நற்செயல்களும் வீண் என்று பழி சுமத்துவதையும் கண்டிருக்க வேண்டும். தங்கள் குடும்பத்திற்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதைக் குறித்து வருந்தியிருக்கவும் வேண்டும். வளமையும், வசதியான வாழ்க்கையும் போய், வறுமை தாண்டவமாடுவதைக் குறித்துக் கவலையுற்றிருக்க வேண்டும். மகிழ்ச்சியும், வளமும், செல்வமும் நிறைந்திருந்த குடும்பத்தில் வறுமை வந்ததால், எல்லாம் மாறியது. வறுமை அவர்களிடையே மனத்தாங்கலை ஏற்படுத்தியது. கணவன் மனைவி உறவையும் பாதிக்கும் அளவுக்கு காரணமானது. பார்வையற்ற நிலையில் தான் அகப்பார்வையற்றுப் போனதைக் குறித்து தோபித்து தேவனையுற்றார். அதன் விளைவாக தன் வாழ்க்கையையே வெறுக்கும் அளவுக்கு தள்ளப்படுகிறார். தன் உடல் நோயைவிட, தனக்கு ஏற்பட்ட அவமானத்திற்காக சாக வேண்டுமென்று விரும்புகிறார். இவ்விருப்பத்தை இறை வேண்டல் என்றச் செபமாக எடுத்துரைக்கிறார் (3:1-6).

தன் தாயும் தந்தையும் புரிதல் இல்லாமல் இருவேறு திசைகளில் செல்வதைக் கண்டு வேதனையுற்றிருக்க வேண்டும் இளைஞர் தோபியா. வறுமையானது மகிழ்ச்சியை, உறவை, அன்பை ஒற்றுமையைக் குலைத்து விட்டதை கண்கூடாகக் கண்டார். இளைஞர் தோபியா, தன்னுடைய வாழ்வுக்குப் பல்வேறு வகைகளில் எடுத்துக்காட்டாக இருந்த பெற்றோர், இப்படி மாறிவிட்டார்களே என்று கண்ணீர் சிந்தியிருக்க வேண்டும்.

இந்நிலையில் பெற்றோரின் துன்பத்தில் பங்கெடுக்கும் மகனாக மாறினார். தோபித்து நூலில் தோபியா எப்படி ஒழுக்கமுள்ள மகனாக, உண்மையுள்ள மகனாக, தந்தைக்கும் தாய்க்கும் அன்புக்குரிய மகனாக, பெற்றோருக்கு மனத்தாங்கல் ஏற்படும்போது தன் விருப்பப்படி வாழ்ந்திடும் மகனாக அல்ல, மாறாக குடும்பத்தின் சூழல் அறிந்து செயல்படும் மகனாக தோபியா சிறந்து விளங்கினார் என்று விபரிக்கின்றார். இது ஒரு சிறிய நிகழ்ச்சி. மாலை வேளை, கணவனும் மனைவியும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். மனைவி தன்னுடைய கருத்தை விளக்கமாக எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். கணவன் மிக பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். மனைவி எப்பொழுது முடிப்பாரோ, அப்பொழுது தானும் அதற்கு விளக்கம் தரலாமென்று காத்திருந்தார். மனைவி தன் கருத்தை விளக்கிக் கூறியபின், தன் காதில் வைத்திருந்த Hearing Machineஐ எடுத்துவிட்டார். கணவன் ஏதும் சொல்ல முடியாமல் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இது எல்லோருக்கும் பொதுவான மனநோய், அதாவது தன் கருத்தையும் எண்ணத்தையும் பிறர் ஏற்க வேண்டும், ஆனால் மற்றவர்களின் கருத்துக்களையோ எண்ணங்களையோ தான் ஏற்க முடியாத மனநிலை. தோபித்து தன் மனைவி அன்னாவிடம் எப்படி ஓர் ஆட்டுக்குட்டி கிடைத்தது என்று கேட்பதற்குப் பதிலாக, அதனைத் திருட்டு ஆடு என்று எண்ணி மனைவியைத் தவறாகப் புரிந்து கொள்கிறார். கணவனின் குற்றச் சாட்டைப் பொறுக்க முடியாத மனைவி அன்னாவும் தோபித்தைத் திட்டித் தீர்க்கிறார். அவரின் நற்பண்புகள் பிறரைக் காயப்படுத்தக் கூடிய அளவுக்கு மாறிவிட்டதே என்றும் குற்றம் சாட்டுகிறார். தோபித்து தன் மனைவியிடம் விளக்கங்களைக் கேட்காமலே தவறான முடிவுக்கு வருகின்றார். தொடர்ந்து தன் கணவர் தோபித்து தன்னைக் குற்றம் சாட்டுவதால், பொறுத்துக்கொள்ள முடியாத அன்னா கடிந்து கொள்கிறார். எனவேதான் இருவருக்கும் இடையே மனத்தாங்கல் ஏற்பட்டது. இருப்பினும் தோபித்து இப்பிரச்சினையை வளர்க்காமல், இறைவனிடம் திரும்புகிறார். அவரை நோக்கி வேண்டுதல் செய்கிறார். அதனால் குடும்பத்தில் மீண்டும் சமாதானம் பிறக்கின்றது.

குழந்தை வளர்பபில் அக்கறை கொண்ட பெற்றோர், பிரச்சினையான சூழல்களில் தோபியாவின் தந்தை போல் செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும். தோபித்து அவருடைய மனைவியின் வசைமொழியைக் கேட்டு, தொடர்ந்து பதிலுக்குப் பதில் கொடுக்கவில்லை. மாறாக அவர் இறைவன்பால் திரும்புகிறார். **“மனிதர்கள்மீது நம்பிக்கை வைப்பதை விட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்” (திபா 118:5)** எனக் கண்டு கொண்டார் தோபித்து.

தேவதனையுறும் போதும், துன்புறும் போதும், அவமானம் அடையும்போதும், ஆதரவற்ற நிலையிலும், பிறரால் தவறாகப் புரியப்படும் போதும், எவ்வகை மனிதராக இருந்தாலும் அவ நம்பிக்கைக்கு உள்ளாவது உறுதி. தன்னுடைய உயிரையே வெறுக்கும் அளவுக்கு தள்ளப்படுவதும் உண்டு. தோபித்து தன் உணர்வுகளையும், எண்ணங்களையும் மிகப் பெரிய இறை வேண்டலாக ஆண்டவரிடம் எடுத்தியம்புகிறார். அவரின் இறை வேண்டல் வழியாக தன்னுடைய வழக்கை இறைவனிடம் முறையிடுகிறார். அவமானம் அடைவதைவிட சாவதே மேலென்றும், இறைவன் அவமானத்தையும், துன்பத்தையும் மாற்ற வல்லவர் என்றும் நம்புகிறார். தோபித்தின் இறைவேண்டல் அவரின் ஆழமான நம்பிக்கையையும், எல்லாம் மாறும் என்ற நேர்மறையான நோக்கையும் வெளிப்படுத்துகின்றது. தோபியா தந்தையின் இவ்வேண்டலைக் கேட்டிருந்திருக்க வேண்டும். இதைத் தொடர்ந்து என்ன நடந்தது என்று விவிலிய ஆசிரியர் நமக்கு விளக்கவில்லை. இளைஞன் தோபியா பெற்றோரை சமாதானப்படுத்தியிருக்க வேண்டும். அல்லது இவ்விருவருக்குமான வாக்குவாதத்தைக் கண்டு வீட்டில் ஓரமாக ஒதுங்கி இருக்க வேண்டும். தோபியா ஒரு நல்ல இளைஞர். எனவே சண்டையைக் கண்டு ஒதுங்கி இருக்கமாட்டார். மாறாக தன் பெற்றோருக்கிடையே சமாதானம், ஏற்படுத்துவதற்கான வழியைக் கண்டி ருப்பார்.

**தொடர்ச்சி 15ம் பக்கம்**




1946ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ஆம் திகதி முதல் 1947ஆம் ஆண்டு மார்கழி மாதம் 08ஆம் திகதி வரை இத்தாலிய நாட்டிலுள்ள “மோந்திகியாரி” (Montichiari) என்ற பட்டணத்திலுள்ள ஆலயத்தில் அருட்சகோதரி பியேரினா (Rev. Se. Pierina) என்பவர்களுக்கு பரிசுத்த கன்னித்தாய் பதினொரு முறை காட்சிதந்தார். காட்சி தந்த கன்னித்தாய் தன்னை (ரகசிய ரோஜா) (Rosa Mystica) என்று அழைக்கச் சொன்னார்கள்.

1947ஆம் ஆண்டு மார்கழி மாதம் 08ஆம் திகதி மதிய வேளையினது விசேஷ மான ஒரு காட்சியாக இருந்தது. அன்று கன்னித்தாய் இறுதியாக அருட்சகோதரி பியேரினா அவர்களுக்கு காட்சி தந்தார். அந்த நேரத்தை தேவ கிருபையின் நேரமாகக் கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார்கள். அந்த நேரத்தில் ஒருவர் எதைக் கேட்டாலும், அது அவருக்கு கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள்.

## தேவ கிருபையின் நேரம் தாயின் வேண்டுகோள்

1) மார்கழி 08ஆம் திகதி ஜென்மப் பாவம் இல்லாமல் உற்பவித்த அன்னையின் பெருவிழா அன்று நண்பகல் 12 மணிக்கு தொடங்கி ஒரு மணி நேரம் வரை விசேஷ தேவ கிருபையின் நேரமாகும்.
2) இந்த தேவ கிருபை நேரத்தில் ஒருவர் தன் இல்லத்திலோ ஆலயத்திலோ தங்கியிருந்து செபிக்கலாம். அந்த நேரத்தில் எல்லா வித பராக்குகளையும், ஒதுக்கி வைக்க வேண்டும். உதாரணமாக டெலிபோன், அழைப்புகளையோ, கதவைத் தட்டி அழைத்தாலோ கேட்கக் கூடாது. முழுமையாக அந்த நேரத்தில் கடவுளோடு இணைந்து இருக்க வேண்டும்.
3) ஐம்பத்தியொன்றாவது திருப்பாடலை கரம் விரித்து மூன்ற முறை சொல்லி இந்த நேரத்தை தொடங்க வேண்டும்.
4) மீதி நேரத்தில் மௌனமாக கடவுளோடு இணைந்து இருந்து ஆண்டவருடைய பாடுகளைத் தியானிக்கலாம்.
5) ஜெபமாலை சொல்லலாம். உங்க -ளுக்கு விருப்பமான முறையில் ஆண்டவரைப் போற்றிப் புகழலாம். உங்களுக்கு விருப்பமான செபங்க ளைச் சொல்லி பாடல்கள் பாடலாம். சங்கீத வசனங்களைப் படித்து தியானிக்கலாம்.

## திருப்பாடல் 51 பாவ மன்னிப்புக்காக மன்றாடல்

*கடவுளே! உமது பேரன்புக்கேற்ப*
*எனக்கு இரங்கும்.*
*உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப*
*என் குற்றங்களைத் துடைத்தருளும்*
*என் தீவினை முற்றிலும் நீங்கும்படி*
*என்னைக் கழுவியருளும்*
*என் பாவம் அற்றுப்போகும்படி*
*என்னைத் தூய்மைப்படுத்தியருளும்.*
*ஏனெனில், என் குற்றங்களை நான்*
*உணர்கின்றேன்.*
*என் பாவம் எப்போதும்*
*உம் மனக்கண்முன் நிற்கின்றது.*
*உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்*
*உன் பார்வையில் தீயது செய்தேன்*
*எனவே, உம் தீர்ப்பினால்*
*உம் நீதியை வெளிப்படுத்தியுள்ளீர்*
*உம் தண்டனைத் தீர்ப்பில்*
*நீர் மாசற்றவராய் விளங்குகின்றீர்.*
*இதோ! தீவினையோடு*
*என் வாழ்வைத் தொடங்கினேன்*
*பாவத்தோடே என் அன்னை*
*என்னைக் கருத்தாங்கினாள்.*
*இதோ!*
*நீர் விரும்புவது உள்ளத்து*
*உண்மையையே*
*மெய்ஞானத்தால் என் மனத்தை நிரப்பும்.*
*ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்.*
*நான் தூய்மையாவேன்.*
*என்னைக் கழுவியருளும்*
*உறை பனியிலும் வெண்மையாவேன்*
*மகிழ்வொலியும் களிப்போசையும்*
*நான் கேட்கும்படி செய்யும்.*
*நீர் நொறுக்கிய என் எலும்புகள்*
*களிகூர்வனவாக*
*என் பாவங்களைப் பாராதபடி*
*உம் முகத்தை மறைத்துக்கொள்ளும்*
*என் பாவக்கறைகளை எல்லாம்*
*துடைத்தருளும்*
*கடவுளே! தூயதோர் உள்ளத்தை*
*என்னுள்ளே படைத்தருளும்*
*உறுதிதரும் ஆவியை*
*புதுப்பிக்கும் ஆவியை*
*என்னுள்ளளே படைத்தருளும்*
*உறுதிதரும் ஆவியை*
*புதுப்பிக்கும் ஆவியை*
*என்னுள்ளே உருவாக்கியருளும்.*
*உமது முன்னிலையிலிருந்து*
*என்னைத் தள்ளிவிடாதேயும்*
*உமது தூய ஆவியை*
*என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும்*
*உம் மீட்பின் மகிழ்ச்சியை*
*மீண்டும் எனக்கு அளித்தருளும்.*
*தன்னார்வ மனம் தந்து என்னைத்*
*தாங்கியருளும்*
*அப்போது குற்றம் செய்தோர்க்கு*
*உம் வழிகளைக் கற்பிப்பேன்.*
*பாவிகள் உம்மை நோக்கி திரும்புவர்*
*கடவுளே, எனது மீட்பின் கடவுளே!*
*இரத்தப் பழியினின்று என்னை*
*விடுவித்தருளும்*
*அப்பொழுது, என் நா*
*உமது நீதியை முன்னிட்டுப் பாடும்*
*என் தலைவரே! என் இதழ்களைத்*
*திறந்தருளும்*
*அப்பொழுது, என் வாய்*
*உமக்குப் புகழ் சாற்றிடும்*
*ஏனெனில் பலியினால் உம்மை*
*மகிழ்விக்க முடியாது,*
*நான் எரிபலி செலுத்தினாலும்*
*நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை*
*கடவுளுக்கேற்ற*
*பலி நொறுங்கிய நெஞ்சமே,*
*கடவுளே! நொறுங்கிய*
*குற்றமுணர்ந்த உளத்தை*
*நீர் அவமதிப்பதில்லை.*
*சீயோனுக்கு இன்முகம் காட்டி*
*நன்மை செய்யும்*
*எருசலேமின் மதில்களை*
*மீண்டும் கட்டுவீராக*
*அப்பொழுது, எரிபலி, முழு எரிபலி எனும்*
*முறையான பலிகளை விரும்புவீர்*
*மேலும், இளங்காளைகள் உமது பீடத்தில்*
*பலியாகச் செலுத்தப்படும்.*

# புதுமைப் பெண் மரியா



# அமல உற்பவம்

**மார்கழி – 08**

"எல்லாம் வல்ல இறைவன் தந்த தனி அருளாலும் சிறப்புரிமையாலும், மனித குல மீட்பர் இயேசுக் கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டும், தூய கன்னி மரியா கருவான முதல் கணத்திலிருந்தே ஜென்ம பாவத்தின் மாசு எதுவுமின்றிக் காப்பாற்றப் பெற்றார் எனும் கோட்பாடு இறைவ-னால் வெளிப்படுத்தப்பட்டது. எனவே இதை அனைத்து விசுவாசிகளும் உறுதியாகவும், முழுமையாகவும் விசுவசிக்க வேண்டும் என வரையறுத்து அறிவோம்". 1854ஆம் ஆண்டு மார்கழி திங்கள் 8ஆம் நாளில் திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் மேற்கண்டவாறு அமல உற்பவ விசுவாசக் கோட்பாட்டைப் பிரகடனப்படுத்தினார்.

நாம் ஆண்டுதோறும் மார்கழி 8ஆம் திகதியன்று "மரியா அமல உற்பவி" என்ற விழாவைச் சிறப்பிக்கின்றோம். திருவருகைக் காலத்தில் இவ்விழா அமைந்திருப்பது மிகவும் பொருத்தம் என்று கூறலாம். மரியா இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்து காத்திருந்தார். நாமும் இயேசுவின் வருகைக்காக செபத்தில் நிலைத்திருந்து எம்மை தயாரிக்க வேண்டும். இதனால் திருவருகைக்கால தயாரிப்பின்போது நாம் மரியாவை நோக்கி செபிக்கவும், அவரது அருட்துணையை நாடவும் இவ்விழா உதவுகின்றது.

மரியா - அமல உற்பவி என்று கிறிஸ்தவ திருமறையின் தொடக்க காலத்திலிருந்தே இறைமக்கள் விசுவசித்து வந்திருக்கின்றனர். மரியா கருவில் உருவான தருணம் முதல் பாவ மாசு ஏதுமின்றி வாழ்ந்தார். ஆதிப் பெற்றோர் இழைத்த பாவத்தினால் மனுக்குலம் சாபத்திற்குள்ளானது. இதனால் மனித பிறப்பில் தோன்றும் யாவரும் இந்த பாவ நிலையில் / அருளிழந்த நிலையில் பிறக்கின்றனர். இந்த பாவ நிலையை அகற்றவே திருமுழுக்கு அளிக்கப்படுகின்றது. மனுக்குலம் அடைகின்ற சாப கேட்டிலிருந்து தூய மரியா விடுதலைப் பெற்றவராய், பாவ நிலை தீண்டாத, விதிவிலக்காய் உற்பவித்தார். அவர் உற்பவித்தது, வாழ்ந்தது இவை யாவும் அருளின் நிலையில்தான். இந்த தனிவரம் மரியாவுக்கு அருளப்பட்டது ஏன்? அருளின் பிறப்பிடமாய் திகழும் இறைவனுக்கே தாயாகும் பேற்றினை அளித்த இறைவன் மரியாவைப் பாவமாசு அணுகாமல் பாதுகாத்தார் என்பதில் வியப்பொன்றும் இல்லை.

"உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலை-யைக் காயப்படுத்தும், நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்" என்றார் (தொ.நூ 3:15). இதில் கூறப்பட்ட பெண் மரியா என்றும், அவள் வித்து இயேசு என்றும் திருச்சபை எப்போதும் கருதியது. அலகையை எதிர்த்து நிற்கும் அணியில் இயேசுவும் மரியாவும் ஒரு சேர இருப்பதை விளக்குகின்றது இவ்வசனம்.

"அருள் மிகப் பெற்றவரே வாழ்க!" (லூக் 1:28) என்ற வானதூ-தரின் வாழ்த்துரையும், "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே" என்ற எலிசபெத்தின் புகழ்மொழியும் மரியாவின் அமல உற்பவத்திற்கான விவி-லிய ஆதாரங்கள் எனலாம். தொடக்க காலத்திலிருந்தே மரியா - அமல உற்பவி என்ற கோட்பாட்டில் திருச்சபை உறுதியாக இருந்தது. இது 11ஆம் நூற்றாண்டில் தெளிவான வடிவம் கொண்டிருந்தது. அமல உற்பவத் திருநாள் கொண்டாடப்பட்டது. 1497இல் திருத்தந்தை நான்காம் சிக்ஸ்டஸ் இத்திருவிழாவிற்கான தனிச் செபங்களைத் தொகுத்து வழங்கினார். 1546இல் திரிதெந்தின் பொதுச்சங்கம் அமல உற்பவ மறையுண்மையை ஏற்றுக் கொண்டது. 1708ஆம் ஆண்டில் திருத்தந்தை ஒன்பதாம் கிளமென்ட் அமல உற்பவத் திருநாளை கடன் திருநாளாக அறிவித்தார்.

19ஆம் நூற்றாண்டில் பல்வேறு பக்தி சபைகளும், தனி நபர்களும் இதனை விசுவாச கோட்பாடாக அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்று 1854 மார்கழி 8ஆம் நாளில் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் மரியாவின் அமல உற்பவத்தை விசுவாசக் கோட்பாடாக பிரகடனம் செய்தார். திருச்சபையின் மத்திய காலத்தில் சில எதிர்ப்புக்கள் எழுந்தன. கிறிஸ்தவ சீர்திருத்த சபைகள் இக்கோட்பாட்டை ஏற்க மறுத்தன. கத்-தோலிக்க திருச்சபையின் இறையியலாளர்களுள் சிலரும் எதிர்ப்பை தெரிவித்தது திருச்சபையில் திகைப்பை ஏற்படுத்தியது.

## எதிர்ப்புக்கு காரணங்கள்

1) ஜென்ம பாவம் என்பது மனித முறையில் ஏற்படும் உற்பவத்தால் வருகிறது. பெற்றோர்களின் இயல்பான உடல் உறவால் உருவா-னவர் மரியா என்றால் அவரும் ஜென்ம பாவத்தின் பிடியில்தான் இருக்கவேண்டும்.

2) ஜென்ம பாவத்தால் மரியா தீண்டப்படவில்லையென்றால், இயேசு கொணர்ந்த மீட்பு மரியாவுக்குத் தேவையில்லை என்றாகிவிடும். இயேசு-வின் மீட்பு உலகம் முழுவதற்குமானது என்ற உண்மைக்கு இது குறை-வைத் தரும். இதற்குப் பதில் தரும் விதமாக பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த டன்ஸ் ஸ்காட்டஸ் கொடுத்த விளக்கம் பின்வருமாறு:

★ காக்கும் அருள், குணமாக்கும் அருள் என்று இருநிலைகள் உள்ளன. திருமுழுக்கினால் நமக்கு குணமளிக்கும் அருள் வழங்கப்படுகின்றது. மரியா உலக மீட்பரை ஈன்றெடுக்க வேண்டும் என்பதாலும், மரியாவைப் பாவமாசிலிருந்து காப்பாற்ற வேண்டிய காரணத்தாலும் அவருக்கு காக்கும் அருள் வழங்கப்பட்டது.

★ இயேசு கிறிஸ்துவின் மீட்பின் பேறுபலன்கள் எல்லா மனித உயிர்களுக்கும் தேவை. இந்த மீட்பின் பேறுபலன் மரியாவிற்கு முன் கூட்டியே வழங்கப்பட்டது.

இவ்விளக்கத்தை திருச்சபை ஏற்றுக் கொண்டது. இதனால் மற்ற இறையியலாளர்கள் தெரிவித்த மறுப்பு மறைந்தது. "இயேசு-வின் மகிமைக்காக மரியா பாவமாசற்றவராக உள்ளார் என்று ஏற்றுக்கொள்ள நமது விசுவாசம் நம்மை நிர்ப்பந்திக்கிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் மரியா பாவத்தோடு தொடர்புடையவராக இருக்க இயலாது" என்ற புனித அகுஸ்தினாரின் சிந்தனையை விளக்கி டனஸ் ஸ்காட்டஸ் மத்திய கால எதிர்ப்பை எதிர்கொண்டார்.

புனித அகுஸ்தினாரின் பார்வையில் இயேசுவின் பேறுபலன்களை முன்னிட்டு அன்னை மரியாவுக்கு கொடுக்கப்பட்ட சிறப்புக் கொடை அவரது அமல உற்பவம். கருவானது முதல் இறப்பு வரை மரியா அருள் நிலையில் வாழ்ந்தார். தொடக்க நிலையில் மட்டுமல்லாமல் தொடர்ந்த வாழ்வு முழுவதும் அவர் அருள் நிலையில் வாழ்ந்தார். தொடக்க நிலை இறைவ-னின் சிறப்புக்கொடை. தொடர் வாழ்வு மரியாவின் முயற்சி. நாமும் திருமுழுக்கினால் தொடக்க அருள் நிலையைப் பெற்றுக்கொள்கிறோம். நமது தொடர் வாழ்வு அருளாலும் மீட்பின் பேறுபலன்களாலும் சிறப்படைய வேண்டும். நமது கிறிஸ்தவ சமூகங்களும் அருள் நிறைந்த சமூகங்களாக திகழவேண்டும். நமது மானிட சமூகமும் பாவங்கள் நீங்கப் பெற்ற, தீமைகள் அகற்றப்பட்ட சமூகமாக வாழவேண்டும் என்ற அழைப்பை, அறைகூவலைத் தருகின்றது அமல உற்பவ மறையுண்மை.

திருச்சபை இயேசு கிறிஸ்துவின் மறையுடல், ஆகவே அது புனிதமானது. அலகையின் அச்சுறுத்தல்களை வென்று உலக மக்களை புனித வாழ்வுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய கடமை திருச்சபைக்கு உண்டு. "இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிகொள்ளா" (மத் 16:18) இயேசுவின் இவ்வார்த்தைகளுக்கிணங்க தீமைகளை வென்று புனித வாழ்வின் வெற்றியில் வீர நடை போடுவோம்.

# என் தாயே!



அம்மா! நீ தாங்கிய அந்த அதிசயமான பொக்கிஷத்தை -
குழந்தை இயேசுவை
அடிக்கடி எனக்கு காண்பித்தருளும்.
அவர் உம்மை தாயாக தேர்ந்தெடுத்தார்
என்று நான் அறிவேன்
என் அம்மா! உமது வழியாக இயேசுவைக் காணவும்
உம் கரங்களிலேயே உமது
மகனான அவரை ஆராதிக்கவும் நான் விரும்புகிறேன்.
அம்மா! உம் உதவியின்றி இயேசுவைக் காண
என்னால் இயலாது. உம் வழியாக மட்டுமே இறை-
மகனை அணுக என்னால் இயலும்.
அவர் வழி நான் பிதாவிடம் செல்லவும் முடியும்.
ஆகையால் என் தாயே! இயேசுவை எனக்கு
காண்பித்தருளும். அவர் என் ஆன்மாவைத்
திருப்திப்படுத்துவார். உம் திருக்குமாரனும் என்
ஆண்டவருமான இயேசு தான் என் எல்லாமாக
இருக்கின்றார்.
அம்மா! மற்ற அனைவரையும் விட உன்னுடனே
வாழும் இயேசுவைக் காண நான் எவ்வளவோ
ஆசைப்படுகின்றேன்! அவரை பார்த்து தியானிக்க என்
ஆன்மா ஏங்குகின்றது. அவரை தேடவும், கண்டடையவும்
என் இதயத்திற்கு அதிகமான ஆர்வம் உண்டு.
ஓ அன்னையே! என் பாவங்களையும் குற்றங்களையும்
நான் ஒப்புக் கொள்கின்றேன். இயேசுவைக் காண எனக்கு
தகுதியில்லை. ஆனாலும் வேண்டுதல் செய்யாமல்
இருக்க என்னால் இயலாது. ஏனெனில் அவர்
என்னிடமிருந்து செபத்தை எதிர்பார்க்கின்றார். நிலையாக
செபிக்க என் இதயமும் என்னைக் கட்டாயப்படுத்துகிறது.
அம்மா! நீயும் அதைத்தானே விரும்புகின்றாய். ஆகை-
யால் என் தாயே! தொடங்கியிருக்கும் உமது ஆண்டிலே
தியானத்திலும், செபத்திலும், பகிர்விலும், பாசத்திலும்
நிரந்தரமாக இருக்க நான் தீர்மானித்திருக்கிறேன்.

தொகுப்பு :
S. விஜிதா, புதுச்செட்டித்தெரு பங்கு

## நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் சில

- ✪ வெள்ளம் வந்தாலும் உறுதியோடு நிற்கின்ற நாணல் புல்லிடமிருந்து மன உறுதியைக் கற்றுக் கொள்வோம்.
- ✪ மெல்ல மெல்ல நடந்து பாரத்தை சுமந்து செல்கின்ற நத்தையிடமிருந்து வாழ்க்கை சுமையை சுமப்பதை கற்றுக் கொள்வோம்.
- ✪ கற்பாறையைக் கூட பிளக்கும் மெல்லிய வேரிடமிருந்து பலத்தைக் கற்றுக் கொள்வோம்.
- ✪ பருந்தைக் கூட எதிர்க்கும் தாய்க் கோழியிடமிருந்து பாசத்தைக் கற்றுக் கொள்வோம்
- ✪ தன்னை உருக்கி பிறருக்கு ஒளியைத் தரும் எரியும் மெழுகுவர்த்தியிடமிருந்து தியாகத்தைக் கற்றுக் கொள்வோம்.
- ✪ "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது போல நன்றி மறவாத நாயிடமிருந்து நன்றி மறவாமையைக் கற்றுக் கொள்வோம்.
- ✪ பொறுமையாய் செயல்பட்டு கற்பாறையை சிற்பமாய் மாற்றும் சிற்பியிடமிருந்து பொறுமையைக் கற்றுக் கொள்வோம்.
- ✪ யார் மூலமாவது அல்லது எதன் மூலமாவது தனக்கு ஆபத்து வரலாம் எனத் தெரிந்திருந்தும் எதையும் பொருட்படுத்தாது சுறுசுறுப்பாய் இயங்கும் எறும்பிடமிருந்து சுறுசுறுப்பை, கற்றுக் கொள்வோம்.
- ✪ எல்லாவற்றிக்கும் மேலாக, நாம் பாவிகள் என அறிந்திருந்தும், நமக்காய் இப்பூமியிலே பிறந்து பாடுகள் பல பட்டு, உயிர்த்தெழுந்து, எம்மை பாவத்திலிருந்து மீட்ட இறைமகன் இயேசுவிடமிருந்து பிறரன்பையும், இறையன்பையும் கற்றுக் கொள்வோம்.

**ஆக்கம் :**
P.M மேரி பெனடிக்கா,
பென்ரித் தோட்டம், புனித அந்தோனியார் வீதி, அவிசாவளை.




## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

### கணவன் மனைவி உறவை ஏற்படுத்த ஆசைப்பவேண்டும்

ஒருவர் மற்றவரைப் புரிந்துகொண்டு வாழ்வதற்கு இருவருக்கிடையிலும் நிரந்தரமாகத் தொடர்பை ஏற்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். கருத்துக்களையும், உணர்வுகளையும் பரிமாறிக் கொள்ளவேண்டும். அப்படியானால் இருவரும் கதைத்தல் வேண்டும். மனம்விட்டுக் கதைக்காமல் உறவை வளர்த்துக்கொள்வது கடினமாகும். ஆகவே திருமணம் முடிக்கும் எல்லாத் தம்பதிகளுக்கும் உறவை வெளிப்படுத்த, வளர்க்க விருப்பமும், ஆயத்தமும், திறமையும் இருத்தல் வேண்டும். சில தம்பதியினருக்கு மனம்விட்டுக் கதைக்க, கலந்துரையாட நேரம் இல்லாதிருக்கின்றது. இது மிகவும் கவலைக்குரிய நிலையாகும்.

உறவை வளர்க்க, வெளிப்படுத்த நேரத்தை தேடிக்கொள்ளவேண்டும். நேரத்தை ஒதுக்க முடியாதவர்கள் தமது தொடர்பை, உறவை வளர்த்துக்கொள்வது எப்படி? ஆகக் குறைந்தது ஒரு நாளுக்கு அரை மணித்தியாலமாவது ஒருவர் மற்றவருடன் தமது கருத்தை, உணர்வை, அனுபவத்தைக் கலந்துரையாடவேண்டும்.

திருமணம் முடித்து ஆறுமாதமாகும்பொழுது தம்மிடையே உறவு குறைகின்றது என்பதை ஒரு தம்பதியினர் உணர்ந்து கொண்டனர். ஏன் அந்நிலை என்பதைத் தேடிப்பார்த்தபோது ஒரு உண்மை புலப்பட்டது. ஆறு மாதங்களுக்கு முன் இந்த இளைஞன் அதாவது கணவன் ஒரே நேரத்தில் ஒரு புதிய வேலைகளை ஆரம்பித்துள்ளார். அதில் ஒன்று இந்தப் பெண்ணைத் திருமணம் முடித்தது. அடுத்தது ஒரு பஸ் வண்டியை விலைக்கு வாங்கியது. மனைவியைச் சந்தோஷப்படுத்துவதற்காக பஸ்ஸை ஓட்டிப் பணம் சம்பாதித்தார். ஆகக் கூடுதலான பணம் சம்பாதித்து இரவாகியே வீடு திரும்புவார். இதனால் காலையிலும், பகலிலும், இரவிலும் இருவரும் கதைக்க நேரம் கிடைக்கவில்லை. உணர்வுகள், கருத்துக்களை வெளிப்படுத்த நேரம் கிடைக்காததால் இருவருக்கிடையிலும் உறவு குறையத் தொடங்கியது. கணவன் தன்னை அறியாமலே பஸ்வண்டியையும் திருமணம் முடித்துள்ளார். பல மணித்தியாலங்கள் பஸ் வண்டியுடனும், சில நிமிடங்களே மனைவியுடனும் நேரத்தைச் செலவழித்துள்ளார்.

உறவை வெற்றிகரமாக அமைக்க கணவன் மனைவி இருவரும் உணர்வுகள், கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள நேரத்தை ஒதுக்குவது முக்கியமானதாகும். சிலர் இக்கருத்தை வேறுவிதமாக நோக்குவர். அதாவது அதிக நேரத்தை மனைவியுடன் கதைக்க ஒதுக்கினால் சண்டையிலேயே முடிகிறது. ஆகவே குறைவாகக் கதைத்தால் போதாதா? என்று கூறுவர். கலந்துரையாடல் என்பது சண்டைபிடிப்பதல்ல. இருவரும் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பாவிக்கின்றனர். ஒன்றியத் தொடர்பா? ஒன்றாத் தொடர்பா? "நேரம் என்ன?" என்று கேட்கும்பொழுது அதற்குப் பதில் "பத்துமணி" என்று கூறினால் ஒன்றியத் தொடர்பாகும். ஆனால் "நேரம் என்ன?" என்று கேட்கும் பொழுது "நீங்கள் பாருங்கள் எனக்கு நேரமில்லை" என்றால் ஒன்றாத் தொடர்பாகும். ஆகவே நேரம் ஒதுக்கிக் கலந்துரையாடும் பொழுது ஒன்றியத் தொடர்பு வார்த்தைகளையே பாவிக்க வேண்டும். அதனாலேதான் பரிசுத்த வேதாகமத்தில் சீராக் ஆகமம் 36:23ல் "அவளது பேச்சில் இரக்கமும் கனிவும் இருக்குமானால் அவளுடைய கணவன் மற்ற மனிதர்களைவிட நற்பேறு உடையவன்" என்று கூறப்படுகின்றது. இது கணவனுக்கும் பொருந்தும் அல்லவா!

சிந்திப்போம்! செயற்படுவோம்!!

*தொடரும்...*

## விசுவாசத்தைக் காக்க விழிப்பாயிருங்கள்

### கத்தோலிக்கரின் திருமுழுக்கு

அருட்பணி. பிலிப் I.V. Dei

கத்தோலிக்க திருச்சபையின் தொடக்க காலத்தில் திருமுழுக்கு ஆண்டுக்கு ஒரு முறை பெரிய சனி இரவிலே நீருக்குள் மூழ்கி வெளிவரும் மறைநிகழ்வாகக் கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் அநேகர் ஒரேமுறையில் திருச்சபையில் சேர நேர்ந்ததால் நீருக்குள் மூழ்கி வெளியேறும் நடைமுறைக்குப் பதிலாக தலையில் நீர் ஊற்றிக் கழுவும் சடங்கு அறிமுகமானது. இது திருச்சபையின் பாரம்பரியத்தில் இருந்து வருவதால் இதற்கான ஆதாரத்தை விவிலியத்தில் காணமுடியாது. அத்தோடு இத்திருமுழுக்கு ஆன்மாவைக் கழுவும் ஒரு ஞானமுழுக்காக இருப்பதால், இதை அவர்கள் ஒரு அடையாள முழுக்காகக் கொடுத்தார்கள். இதனால் தலையில் நீர் ஊற்றி அதை மட்டும் கழுவுதல், முழு உடலையும் கழுவுதலுக்குச் சமமாய் இருக்கிறது. ஆன்மாவைக் கழுவும் செயல் இவ்வாறு நிறைவேறுகிறது.

அக்காலகட்டத்தில் மக்கள் குடும்பம் குடும்பமாகக் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதால், பெரியவர்களோடு சேர்ந்துக் குழந்தைகளுக்கும் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. குழந்தைகள் சுயமாகத் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட முடியாதவர்களாய் இருப்பதால், இவர்களின் விசுவாசப் பொறுப்பையும் பெற்றோரே ஏற்றுக் கொண்டார்கள். இந்த வழக்கமே இன்று கத்தோலிக்க திருச்சபையில் இருந்து வருகிறது.

*தொடரும்...*



## குழந்தைகளுக்கு தவறாமல் சொல்லிக் கொடுக்க வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள்

**சுத்தம் :** உங்கள் குழந்தைகளுக்கு அவர்கள் சுத்தமாக இருப்பது பற்றியும், தூய்மை பற்றியும், ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டும். தினமும் குளிப்பது, விரல் நகங்களை வெட்டுவது, உண்ணுவதற்கு முன்னர் கைகளை கழுவுவது, கழிவறைக்கு சென்ற பிறகு கைகளை கழுவுவது போன்ற நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொடுங்கள்.

**தூய்மை :** சுத்தம் என்பது உங்களின் தனிப்பட்ட ஆரோக்கியம். ஆனால் தூய்மை என்பது உங்களின் சுற்றுச் சூழல் மற்றும் வாழ்வு முறையை சார்ந்ததாகும். பொதுவாக குழந்தைகள் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க மாட்டார்கள். ஆகவே தூய்மையின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பது மிகவும் அவசியம். அவர்களின் பொருட்களை சுத்தமாக வைத்து அவைகளை ஒழுங்காக அடுக்கி வைக்க-சொல்லிக் கொடுங்கள்.

**மரியாதை :** மரியாதை என்பதன் முக்கியத்துவத்தை சரியான முறையில் உங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்க அவர்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். மரியாதை என்பது மூத்தவர்களுக்கும், உயர்ந்த அந்தஸ்து அல்லது பதவியில் இருப்பவர்களுக்கு மட்டுமில்லை அனைத்து மனிதர்களையும் மதித்து மரியாதை கொடுக்க குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்.

**நேரம் தவறாமை :** நல்ல பழக்கவழக்கங்களில் நேரம் தவறாமை என்பது முக்கியமான பழக்கமாகும். இதை குழந்தைகளுக்கு சின்ன வயதிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும். அது அவர்களை அனைத்திலும் நேரம் தவறாமல் நடந்து, தங்கள் வாழ்க்கையை சீராக கொண்டு செல்ல உதவி புரியும்.

**பணிவு :** குழந்தைகளுக்கு பணிவைப் பற்றி சொல்லிக் கொடுப்பது மிகவும் சிரமம்தான். ஆனால் நேர்மறையாக அவர்களிடம் உரையாடி, அவர்களுக்கு தன்னம்பிக்கையையும், பாசத்தையும் செலுத்துங்கள். அதுவே அவர்களுக்கு வாழ்க்கையில் பணிவை கற்றுக் கொடுக்கும். அவர்களின் உணர்வை காயப்படுத்த கூடாது என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

**விழிப்புணர்ச்சி :** உங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை பாதிக்கப் போகும் விஷயங்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். சுய அக்கறை மற்றும் சுய பாதுகாப்பைப் பற்றி கற்றுக் கொடுங்கள். இவைகளை அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதால், அவர்கள் பாதுகாப்பாக இருக்க கற்றுக் கொள்வார்கள்.

**தூங்கும் பழக்கம் :** நன்றாக தூங்கும் பழக்கத்தை பற்றி குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பது மிகவும் அவசியம். இரவு நீண்ட நேரம் விழித்திருந்தால், அது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்பதை அவர்களுக்கு புரிய வையுங்கள். அவர்கள் அதனைப் பின்பற்ற பெற்றோர்கள் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**குடும்பப் பிணைப்பு :** குடும்பத்தின் மீது அதிக பற்று மற்றும் பிணைப்பு வைக்க வேண்டும் என்ற நல்ல பழக்கத்தை கண்டிப்பாக குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்து, அதன் முக்கியத்துவத்தையும் சொல்லிக் கொடுங்கள். குடும்ப உறுப்பினர்கள் அடிக்கடி சந்தித்து, ஒன்றாக அமர்ந்து உண்ணுங்கள். ஏனெனில் குழந்தையை ஒரு சிறந்த மனிதனாக வளர்க்க குடும்ப பிணைப்பு மிகவும் அவசியம்.

நல்ல பழக்கவழக்கங்கள் கடைசி வரை நீடிக்கும். குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுங்கள். அது தான் அவர்களின் தனித்தன்மையை வடிவமைக்கும்.




## திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு 01.12.2013

**வாசகவிளக்கம்:** இன்றைய முதல் வாசகத்தின் வழியாக இறுதிநாளை குறித்து கூறும் எசாயா இறுதிநாளில் வேற்று இனத்தார் அனைவரும் யாவே இறைவனை தேடிவருவர் என்றும், யாவேயின் கட்டளைகளை கடைப்பிடிப்பர் என்றும், பிற தெய்வங்களை விட யாவே இறைவன் பெரியவர் என்றும் உரைக்கின்றார். அதன் மூலம் இஸ்ராயேல் மக்கள் கடவுளின் கட்டளைகளை ஏற்று வாழ அழைப்பும் விடுக்கின்றார். இரண்டாம் வாசகத்தில் இருளின் ஆட்சிக்குரிய செயல்களை களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலனாம் இயேசுவை அணிந்து இயேசுவின் வருகைக்கு தயாராக வாழ தூய பவுல் அடியார் அழைப்பு விடுக்கின்றார். இன்றைய நற்செய்தி வழியாக ஆண்டவரின் நாள் குறித்தும், நிறைவு காலம் குறித்தும் தந்தை இறைவனைத் தவிர யாருக்கும் தெரியாத நிலையை அத்திமர உவமையின் வழியாக இயேசு சுட்டிக் காட்டுகின்றார். எனவே நாமும் ஆண்டவரின் நாள் குறித்து விழிப்பாயிருந்து செபிக்க இத்திருவருகைக் காலத்தைப் பயன்படுத்துவோமாக..

**முதல் வாசகம் :** எசாயா 2:1-5

இறையரசின் முடிவில்லா அமைதியில் நாடுகள் அனைத்தையும் ஆண்டவர் ஒன்று சேர்க்கின்றார்.

**பதிலுரைப்பாடல் :** அக மகிழ்வோடு ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்.

**இரண்டாம் வாசகம் :** உரோ 13:11-14

நமது மீட்பு மிக அண்மையில் உள்ளது

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும். உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 24:37 - 44

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்

கிறிஸ்து இயேசு மண்ணுக்கு வந்த கிறிஸ்து பிறப்பு விழாவை சிறப்பாக கொண்டாட திருவருகைக் காலத்தின் ஊடாக எம்மை வழி நடத்தும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவர் மீதும் உமது திருவருளைப் பொழிந்திட எழுந்தருளி வாரும்...

நாட்டின் மக்களாகிய நாம் அனைவரும் களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டை, சச்சரவு ஆகியவற்றைத் தவிர்த்து செப தபங்களால் இத்திருவருகைக் காலத்தை பயன்படுத்தவும், பகிர்வதன் வழியாக இல்லாதோரை மகிழ்விக்கவும், கடவுளுக்கு உகந்த விதமான ஆன்மீக ஆயத்தங்களில் ஈடுபடவும் எம் உள்ளங்களில் எழுந்தருள வாரும்..

இவ்வுலகிற்கு ஒளியாக வந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள இருளின் செயற்பாடுகளை விட்டு விலகவும், தன்னைக் குறித்தும் சக மனிதனைக் குறித்தும், இறைவனைக் குறித்தும், விழிப்பாயிருந்து செயல்படவும் தெளிவுடனும் திறந்த மனதுடனும் கிறிஸ்துவின் பிறப்பு என்னும் மறையுண்மையை தியானிக்கவும் வேண்டிய நல் மனதைத் தந்திட எம்மிடையே எழுந்தருளி வாரும்...

## திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிறு 08.12.2013

**வாசக விளக்கம்:** இஸ்ராயேல் மக்கள் பலரும் நாடு கடத்தப்பட்ட சூழ்நிலையில் எஞ்சியவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அருகாமையில் உள்ள நாடுகளுக்கு சிதறிச் சென்றனர். இந்நிலையில் இறைவாக்கினர் எசாயா அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஜெசெவின் கோத்திரத்திலிருந்து மெசியா தோன்றுவார். அவர் மீது ஆண்டவரின் ஆவி தங்கும். நீதியோடு தீர்ப்பு வழங்குவார். அன்பும் அமைதியும் மக்கள் மனங்களில் தங்கும் என விளக்குவதை முதல் வாசகத்தில் கேட்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய சவுல் கிறிஸ்துவுக்காக துன்புறும் ஊழியனாக மாறினார். பின்னர் பாவத்தில் இருக்கும் பிற இன மக்களை இயேசு மன்னித்து தமது இரத்தத்தினால் தூய வாழ்விற்கு உரிமை உடையவராக்கினார் என விளக்குவதை பார்க்கின்றோம். நற்செய்தியில் "மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது" என பறைசாற்றும் திருமுழுக்கு யோவான் மனம் மாறி தவறுகளைத் திருத்திக் கொண்டு நல்வாழ்வு வாழ அறிவுறுத்துகிறார். ஆண்டவரின் வருகைக்காக நாம் எவ்வாறு நம்மை நாம் தயாரிக்கப் போகின்றோம் சிந்தித்து செயலாற்ற பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் :** எசாயா 11:1-10

நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார்

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவருடைய காலத்தில் நீதி தழைத்தோங்கும்

**இரண்டாம் வாசகம் :** உரோ 15:4-9

மக்கள் அனைவரையும் கிறிஸ்து மீட்கிறார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள் மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 3:1-12

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்

எமக்கு முடிவில்லா பேரின்ப வாழ்வை அருளப்போகும் கடவுளை நோக்கி எம்மை வழிநடத்தும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் உமது அருட்கொடைகளால் நிரப்பிட அவர்கள் மத்தியில் எழுந்தருளி வாரும்...

எமது நாட்டின் சமய, சமூக, அரசியல் தலைவர்கள் அனைவரும் உண்மை, நீதி, நேர்மை, தூய்மை என்னும் வழிகளில் மக்களை வழிநடத்தவும், திருமுழுக்கு யோவானின் அறைகூவல்களை ஏற்று எமது தவறுகளைத் திருத்திக் கொண்டு உண்மையான மனமாற்றம் பெற்று வாழ்ந்திட தேவையான வரங்களை தந்திட எம் மத்தியில் எழுந்தருளி வாரும்

கிறிஸ்துவை எதிர்பார்த்திருக்கும் நாமும் நற்செய்தியை வாசித்து பழைய வாழ்வில் இருந்து, புதுவாழ்விற்கு மாறவும், சுயநலத்திலிருந்து பொது நலத்திற்கும் தற்பெருமையிலிருந்து தாழ்ச்சிக்கும், அநீதியிலிருந்து நீதிக்கும், பாவத்திலிருந்து புண்ணியத்திற்கும் மாறிடத் தேவையான நல் மனதைத் தந்திட எங்கள் நெஞ்சங்களில் எழுந்தருளி வாரும்..

## திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு 15.12.2013

**வாசக விளக்கம்:** நமது துன்பங்களிலிருந்து கடவுள் நம்மை விடுவிப்பார் நம் உடல்கள் வலிமைபெறும், கலங்கிய நம் உள்ளங்கள் அமைதி பெறும். நாம் பூரிப்பு அடைவோம் என் முதல் வாசகம் அறிவுறுத்துகின்றது. ஆண்டவரின் பிள்ளைகளாகிய நல்லவர்களை பொறுமையோடு ஆண்டவரின் வருகைக்காக காத்திருக்க அழைப்பு விடும் தூய பவுல் அடியார் மானிட மகன் இயேசுவின் வருகை தீயவர்களை அழித்து ஒடுக்கப்பட்டவர்களையும், ஓரங்கட்டப்பட்டவர்களையும், தனித்து விடப்பட்டவர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவார் என் இரண்டாம் வாசகத்தில் விளக்கு-கின்றார். திருமுழுக்கு யோவானுக்கு இயேசு பற்றிய ஐயம் எதுவும் இல்லை. தம் இறப்புக்குப் பின் தனது சீடர்கள் இயேசுவோடு இணையவேண்டும் என்பதற்காகவே அவர்களை அவரிடம் அனுப்புகின்றார். மனிதருள் மிகச் சிறந்தவர் யோவான் என்று ஆண்டவர் அவரைப் புகழ்வதை நற்செய்தி விளக்குகின்றது. கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு தகுதியான விதத்தில் எம்மைத் தயாரித்துக் கொள்வதன் மூலம் விண்ணரசில் நுழைய இறையருளை இரந்து வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** எசாயா 15:1-6, 10

கடவுளே வந்து உங்களை விடுவிப்பார்

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே எங்களை மீட்க வந்தருளும்

**இரண்டாம் வாசகம் :** யாக்கோபு 5:7-10

உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள். ஏனெனில் ஆண்டவரின் வருகை நெருங்கி வந்துவிட்டது

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா ஆண்வராகிய என் தலைவரின் ஆவி என் மேல் உள்ளது. ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 11:2-11

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்

துன்பங்களில் இருந்து கடவுள் தரும் விடுதலையையும் கலங்கிய எம் உள்ளங்களுக்கு கிடைக்கும் அமைதியையும் நோக்கி எம்மை வழிநடத்தும் திருச்சபையையும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது அருள் ஆசியைப் பொழிந்திட அவர்கள் நெஞ்சங்களில் எழுந்தருளி வாரும்.

எமது நாட்டை ஆட்சி புரிவோரும் நாட்டு மக்களும் அபிவிருத்தி என்று சொல்லி இயற்கையை அழிக்காமல் பாதுகாக்கவும் ஏழை எளியவர் வாழ்வு நிலை உயரப் பாடுபடவும் ஏற்றத்தாழ்வுளை அகற்றி பொதுவுடமைச் சமுதாயம் ஒன்றை உருவாக்கவும் ஏழை, எளியவர், ஊனமுற்றோர், அனாதைகள் மட்டில் இரக்கம் காட்டவும், பகிர்வு வாழ்வை முன்னெடுக்கவும் வேண்டிய நல்மனதை எமக்குத் தந்திட எழுந்தருளி வாரும்

ஆண்டவர் நமக்கு அருள் புரியும் வரை நாம் பொறுமையோடு காத்திருக்கவும், திருமுழுக்கு யோவான் ஆண்டவர் இயேசுவால் போற்றப்பட்டது போல் நாமும் போற்றப்படவும், இறைவனின் உயிருள்ள வார்த்தையை ஏற்று வாழவும், வெளி ஆடம்பரங்களை அகற்றி உள்ளார்ந்த ஆயத்தங்களை செய்து கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடவும் எம் மத்தியில் எழுந்தருளி வாரும்..

# இலங்கை திருச்சபை வரலாற்றில் சில துளிகள்



**அதிமேதகு ஒஸ்வலட் கோமிஸ் ஆண்டகை (முன்னாள் பேராயர்)**

**தமிழில் அருட்தந்தை அ. உதயதாஸ்**

கி.பி 1551இல் 7ஆம் புவனேகபாகு மன்னரின் மரணம் வரை, போர்த்துக்கேயர் இலங்கையில் மன்னருடைய வேண்டுகோளின்படி யுத்த நடவடிக்கைகளுக்கு உதவுவதிலும், தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுமாக இருந்தனர். கி.பி 1543களிலிருந்து மன்னருடைய வேண்டுகோளுக்கிணங்க கத்தோலிக்க திருமறையைப் போதிப்பதில் ஈடுபட்டனர். இன்றும் பலர் போர்த்துக்கேயர் எமது நாட்டை கி.பி 1505களில் கைப்பற்றி ஐரோப்பிய கிறிஸ்தவ வேதத்தைப் பரப்பினர் என்று வானொலி நிகழ்ச்சிகளிலும், பத்திரிகைகளிலும் அறியத்தருவது வேடிக்கையானது. இது தவறான கருத்துமாகும்.

இதையே பலரும் நம்பி வருகின்றனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இங்கு முதலில் விளங்கிக் கொள்ள வேண்டிய உண்மைதான், கிறிஸ்தவ மதம் மேற்கத்தைய மதமல்ல என்பதை. அது ஆசிய மதம் மத்திய கிழக்கு ஆசியாவில் உருவாகிய மதம். கிறிஸ்துநாதரின் பிரதான சீடரான பேதுரு அப்போஸ்தலர் உரோமைக்குப் போகுமுன்னர் இன்னொருவரான தோமஸ் அப்போஸ்தலர் தென் இந்தியாவிற்கு (கி.பி 52) வந்து மறையைப் போதித்தது வரலாற்றுப் பதிவாக இருப்பதை நாம் மறுக்க முடியாது. இரண்டாவதாக, போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்பே இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வந்ததையும் நாம் சொல்லியாக வேண்டும். மேலும், போர்த்துக்கேயர் கோட்டே இராச்சியத்தில் அதுவும், கடலை அண்டிய மேற்குப் பிரதேசத்தில் தமது ஆதிக்கத்தை செலுத்தியது 1505 இலிருந்து அல்ல என்பதையும் நாம் சொல்லியே ஆக வேண்டும்.

1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக் கரையை அடைய நேர்ந்த காரணம், அவர்கள் அராபியர்களின் கப்பல்களைப் பிடிப்பதற்காக வந்த கடற்பயணத்தில் அலைக்கழிக்கப்பட்டு திசை மாறியதால் ஆகும். அதன் பின்னர் சில மாதங்களில் அவர்களுடைய நாட்டிற்கு போனவர்கள் மீண்டும் 1517லிலே அதுவும் கோட்டே அரசரின் வேண்டுகோளுக்கிணங்கவே இங்கு வந்தனர். இங்கு வந்த பின்னரும் கூட 1597 வரை இங்கு எந்தவிதமான அரசியலிலும் ஈடுபடவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

1505களில் இந்நாட்டை 9வது வீர பராக்கிரமபாகுவும் (1484 - 1509) அவது மகனுமான 8வது தர்ம பராக்கிரமபாகுவும் (1505 - 1509) ஆண்டு வந்தனர். அக்காலத்தில் அராபிய வணிகர்களின் ஏகாதிபதத்தை அடக்கும் வண்ணம் கொழும்பு துறைமுகத்தில் கோட்டை ஒன்றைக் கட்டி பாதுகாப்பு அளிக்குமாறு இரு முறை போர்த்துக்கேயரைக் கேட்டும் அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை. இவ்வரசர்களுக்குப் பின் 7ஆம் விஜயபாகுவும் (1509 - 1521), 7வது புவனேகபாகுவும் (1521 - 1551) ஆண்டனர். பின்னர் தர்பால (1551 - 1597) கோட்டை இராச்சியத்தையும், மயாதுன்னையும் (1521 - 1581) 1வது இராஜசிங்கன் (1581 - 1592) சீதாவாக்கை இராச்சியத்தையும் ஆண்டனர். அதேவேளை கண்டி இராச்சியம் கி.பி 1815(மாசி 2ஆம் திகதி வரை) தேசிய அரசர்களுடைய அதிகாரத்தில் இருந்ததையும் நாம் அறிவோம்.

இது இப்படியிருக்க 1505இலிருந்து போர்த்துக்கேயர் எமது நாட்டை ஆண்டனர் என்று கூறுவது எங்கனம் பொருந்தும்? இதன் உண்மை நிலை என்னவென்றால், எமது சிங்கள அரசர்களான...

தொடர்ச்சி 15ம் பக்கம்




## நாம் எப்பொழுதும் இயேசுவைப் போதிக்க வேண்டும். தேவைப்பட்டால் மாத்திரமே வார்த்தைகளைப் பயன்

## முடிந்தவரை முயற்சி செய்வோம்......

## சொல்வதை விட, வாழ்ந்து காட்டுவோம்.

## மார்கழி – 17

## நான் முயற்சி செய்கின்றேன்....






- ✠ அர்ஜென்டினா நாட்டின் தலைநகரான புவெனோஸ் ஏரஸ் நகரம் அவரது ஊர்.
- ✠ தந்தை : மரியோ ஜோசே பெர்கோக்லியோ.
- ✠ தாய் : ரெஜினா மரியா சிவொரி.
- ✠ பிறந்தநாள் : மார்கழி 17, 1936.
- ✠ இயற்பெயர் : ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ.
- ✠ இயேசு சபையில் சேர்ந்த நாள் : பங்குனி 11, 1958.
- ✠ 1963இல் மெய்யியல் பயின்றார்.
- ✠ 1964 - 1966இல் உளவியல், இலக்கியம் ஆகிய பாடங்களை கல்லூரிகளில் கற்பித்தார்.
- ✠ இறையியல் பயின்று, 1969ஆம் ஆண்டு மார்கழி 13ஆம் நாள் குருப்பட்டம் பெற்றார்.
- ✠ சித்திரை 22, 1973இல் இயேசு சபையில் இறுதி வார்த்தைப்பாடு கொடுத்தார்.
- ✠ இயேசு சபையின் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றது 1973ஆம் ஆண்டு.
- ✠ புனித மிக்கேல் குருமடத்தின் அதிபராகப் பொறுப்பேற்றது 1982ஆம் ஆண்டில்.
- ✠ புவெனோஸ் ஏரஸ் நகரின் உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்றது 1992ஆம் ஆண்டி
- ✠ ஆனி மாதம் 1992ஆம் ஆண்டில் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- ✠ 1997ஆம் ஆண்டில் இணை ஆயராக பொறுப்பேற்றார்.
- ✠ மாசி மாதம் 28ஆம் திகதி பேராயராக நியமிக்கப்பட்டார்.
- ✠ 2001ஆம் ஆண்டு மாசி மாதம் 21ஆம் திகதி கர்தினாலாக நியமிக்கப்பட்டார்.
- ✠ பங்குனி மாதம் 13ஆம் திகதி 2013ஆம் ஆண்டில் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார்.
- ✠ பங்குனி 19ஆம் திகதி 2013ஆம் ஆண்டில் முறைப்படி திருத்தந்தை என்ற பொறுப்பை ஏற்றார்.

# இவர்களின் பார்வையில்...

**மார்த்தா ரூயிஸ் (வயது 60) :**

நம்பவே முடியவில்லை! அமைதியை ஒளியாக வீசுபவர் இவர். இலத்தீன் அமெரிக்காவுக்கு இவர் ஒரு பெரிய கொடை. இருபது நூற்றாண்டுகளாகக் காத்திருந்தோம். காத்திருந்தது ஒரு நலமான காரியமாக முடிந்துள்ளது. (ஆனந்தக் கண்ணீருடன்)

**அன்னை திரென்சோ – ஓவியர், வட இத்தாலி :**

சில நாட்களுக்குள்ளேயே எங்கள் இதயங்களைக் கொள்ளைகொண்டு விட்டார்.

**மாராடோன்னா – உலகப் புகழ் கால்பந்துவீரர் :**

இறைவனின் கரம்தான் எங்கள் நாட்டிற்கு அர்ஜென்டினா நாட்டுத் திருத்தந்தையைக் கொடுத்துள்ளது.

**ஜூடித் தெலோனி – அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி :**

கோவிலுக்குப் போவதை நிறுத்தியுள்ள கிறிஸ்தவர்களின் இதயத்தில் நம்பிக்கை என்ற உணர்வை, ஒளியை இவர் மீண்டும் புத்துணர்வுடன் தூண்டிவிடுவார். திருச்சபையில் நம்பிக்கை இழந்தவர்களுக்குப் புத்துணர்வு தருவார்.

**பியோத்ரோ லொரெட்டி – 7 வயதுடைய இத்தாலி நாட்டுச் சிறுவன் :**

ஏழைகளை இவருக்கு ரொப்பப் பிடிக்கும். என் அப்பாவைப் போல் இனியவர் இவர்.

**ஒபமா – அமெரிக்க அதிபர் :**

ஏழைகளின் பங்காளன். நம்மிடையே காயப்பட்டுள்ள நபர்களின் நண்பர். 2000 ஆண்டுகளாக உலகை உந்துசக்தியாக இயக்கும் அன்பையும், கனிவிரக்கத்தையும் தாங்கி வருகின்றார். இறைவனின் முகத்தை ஒவ்வொருவரிடமும் நாம் காண உதவுகின்றார்.

**ஆமிகுவின் – நியூயார்க் நபர் :**

இயேசுவைப்போல் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, ஏழைகளுக்கு, நோயாளிகளுக்குப் பணிபுரிகின்றவர் இவர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பாதையில் நாம் நடந்தால் தவறுகளை இழைக்க முடியாது.

**அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கர் :**

சமூக நீதியை மையப்படுத்தி ஒரு புது கண்ணோட்டத்தைக் கொண்டு வருவார்.

**ஜான் பார்ட்டன் – கத்தோலிக்க சபையைச் சேராத ஓர் அமெரிக்கர் :**

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள கத்தோலிக்க சபையின் மக்களுக்கு புத்துணர்ச்சியைத் தருவார்.

**இந்திய திருப்பீடத்தூதர் பேராயர் சால்வாத்தோரே பென்னாக்கியோ :**

திருத்தந்தை பிரான்சிஸ் மக்களின் திருத்தந்தை என்ற பெயரைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டுள்ளார்.

➤ தொடர்ச்சி 15ஆம் பக்கம் ➤

# திருத்த

- ✶ கடவுள் நம்மை
அடைவதில்லை. ஆ
ளில் கடவுளிடமிருந்
மனம் தளர்ந்துவிடக்
நம் அன்புத்தந்தை,
மன்னிக்கின்றார். நம்
காட்டும் இதயத்தைக்
- ✶ இறைவன் ஒவ்வொ
இவ்வுலகம் இருக்காத
- ✶ திருச்சபை ஏழ்மைய
இயங்க வேண்டுமென்
- ✶ திருச்சபை இருப்ப
காரணம், இயேசுவில்
மையையும், நன்மை
அறிவிக்கவே!
- ✶ நான் திருத்தந்தையா
பங்கேற்க, தயவுசெ
பயணம் செய்யாதீர்க
பணத்தை ஏழைகளுக்
- ✶ பணக்காரர்களுக்கும்,
உள்ள பிளவு. ஒரு
கடவுளை நோக்கிக்
- ✶ நாம் ஏழைகளுக்கும்,
இல்லாதவர்களுக்கும்
- ✶ அதிகாரத்தில் இ
இவ்வுலகைப் பராமரி
கடமை.
- ✶ முன்னேறி வரும் இ
சாவுக்குரியதுமான
வேண்டும்.
- ✶ உண்மையான அதி
கியுள்ளது. ஏன்,
அதிகாரத்தைப் பய
வகையில் பணிபுரிய
யமான சிலுவையில்
- ✶ இருள் சூழ்ந்த இ
நம்பிக்கையின் ஒ























...டுத்த வேண்டும்.




...ல்.



திருச்சபைக்கென பொக்கிஷமாய் கிடைத்த
புது மலரே!
மக்களின் மனதில் என்றும் வாசம் வீசும்
வாடாமலரே!
வாழ்வில் சொந்தமாய் எங்களோடு ....
நாங்கள் கொண்டாடும் பிறந்த நாளை உலகமே
கொண்டாட நலமாய் வாழ வாழ்த்துகின்றோம்.

# ...ந்தையின்

...மன்னிப்பதில் மனத்தளர்ச்சி
...னால் நாமோ, சிலவேளைக-
...து மன்னிப்புக் கேட்பதில்
... கூடாது. நமது கடவுள்
...அவர் நம்மை எப்பொழுதும்
... அனைவர் மீதும் இரக்கம்
... கொண்டவர் நம் கடவுள்.

...நவரையும் மன்னிக்காவிடில்
...ு, இயங்காது.

...ாக, ஏழைகளைச் சார்ந்து
...று விரும்புகிறேன்.

...தற்கும், இயங்குவதற்கும்
... குடிகொண்டிருக்கும் உண்-
...த்தனத்தையும், அழகையும்

...கப் பொறுப்பேற்கும் விழாவில்
...ப்து உரோமை நகருக்குப்
...ள். அந்தப் பயணச் செலவின்
...கு கொடுத்துவிடுங்கள்.

... ஏழைகளுக்கும் இடையே
...பரிய சமுதாயப் பாவம், அது
...கூக்குரலிடுகின்றது.

... பலவீனர்களுக்கும் முகவரி
... பணிபுரிய வேண்டும்.

...நப்பவர்கள், வல்லரசுகள்
...ந்துப் பாதுகாக்க வேண்டியது

...வ்வுலகைப் பாழ்படுத்துவதும்,
... விதியிலிருந்து பாதுகாக்க

...காரம் பணிபுரிவதில் அடங்-
...திருத்தந்தை கூட தனது
...ன்படுத்தும்போது மேலான
... வேண்டும். இப்பணி ஒளிம-
...முற்றுப் பெறவேண்டும்.

...ன்றைய உலகிற்கு நாம்
...ளியாக இருக்கவேண்டும்.

# பொன்மொழிகள்

மற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் மனிதர்களாக இருக்கவேண்டும்.

- ✶ திருச்சபையைக் குருக்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வராதீர்கள்.
- ✶ இறைமக்களை மீட்பிலிருந்து பிரிப்பவர்கள் இன்றைய வெளிவேடக்காரர்கள். (திருமணத்திற்குப் புறம்பே பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்க மறுத்த குருக்களைக் கண்டித்து, கர்தினால் பெர்கோக்லியோ சொன்ன வார்த்தைகள்)
- ✶ வெளியே வந்து வீதிக்குச் சென்றால் சில விபத்துக்கள் ஏற்படலாம். வீட்டிலேயே முடங்கிக் கிடந்தால் நோய் நம்மைத் தாக்கலாம். நோய்வாய்ப்பட்டு வீட்டில் முடங்கிக் கிடப்பதைவிட, வீதிக்குச் சென்று விபத்தைச் சந்திப்பது மேலானது (குருக்களுக்குச் சொன்ன வார்த்தைகள்)
- ✶ அதிகார வர்க்கத்தில் பொறுப்பு வகிப்பவர்களைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்கின்றேன், இப்படைப்பை பாதுகாத்து வாருங்கள். இயற்கையில் பொறிக்கப்பட்டிருக்கும் கடவுளின் திட்டத்தை பாதுகாப்பீர்களாக, ஒருவர் ஒருவரைப் பாதுகாப்போம். சுற்றுச் சூழலை பாதுகாப்போம்.









# விசுவாசத்தின் ஒளி




## திருத்தூது மடல் பகுதி 01

## அன்பினில் நம்பிக்கை வைத்தோம்

(1யோவா 4:16)

### நம் விசுவாசத்தின் தந்தை, ஆபிரகாம்

8. காலங்காலமாக, நமது வாழ்க்கைத் திட்டங்களில், நம் விசுவாசமே நம்மை வழிநடத்தியுள்ளது. எனவே விசுவாசம் என்றால் என்னவென்று அறிய முற்பட்டால், பழைய ஏற்பாட்டு நூலில் முதலில் சுட்டிக்காட்டப்பட்டு அதனை நம்பி வழி நடந்தவர்களின் பாதையில் நாம் அவசியம் செல்ல வேண்டும். இவர்களில் விசுவாசத்தின் தந்தையென அழைக்கப்பட்ட ஆபிரகாம் முதன்மையானவர். அவர் வாழ்வில் கண்ட சோதனை என்ன? கடவுள் அவரிடமே கூறுகின்றார், கடவுளே தம்மை வெளிப்படுத்திக் கொண்டு அவரைப் பெயர் சொல்லி அழைக்கின்றார். கேட்டதென்றே, அவரது விசுவாசம். ஆபிரகாம் கடவுளைக் காணவில்லை, ஆனால் அவர் குரலை கேட்கின்றார். விசுவாசம் இவ்வாறு அவரை வெற்றி கொள்கின்றது. இக்கடவுள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ, குறிப்பட்ட நேரத்திற்கோ மட்டும் கடவுளல்ல மாறாக, ஆபிரகாம் ஈசாக் மற்றும் யாக்கோபுவின் கடவுள், அவர் மட்டுமே மனிதனோடு பேசவும், ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தவும் கூடும். **'நீர்'** என்று கூறும் ஒரே வார்த்தையில் பெயர் கூறி அழைத்தவரிடம் நாம் அனைவரும் இணைந்து ஒப்புக் கொடுக்க முயல்வதே விசுவாசம்.

9. ஆபிரகாமிடம் கூறப்பட்ட வார்த்தை ஒரு அழைப்பு மட்டுமல்ல, வாக்குறுதியும் ஆகும். முதலாவது, அவரது சொந்த நாட்டை விட்டுச் செல்லவும், புதிய வாழ்வுக்கு அழைக்கப்படவும், எதிர்பாராத எதிர்கால வாழ்வு ஒன்றுக்காக வெளியேற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்ட ஒன்றாகும். ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட இவ்விசுவாசப் பாதை நம்மை முன்னோக்கி வழிநடத்துகின்றது. கடவுளுடைய வார்த்தையால் திறக்கப்பட்ட பரந்த வெளியை நோக்கிச் செல்லவும் வழி பிறந்தது. இவ்வார்த்தை ஒரு வாக்குறுதியையும் உள்ளடக்கியது **"உன் வழி மரபினரை பூவுலகின் மண்ணைப்போலச் பெருகச் செய்வேன்"** (தொ.நூ 13:16) என்றும், **"விண்மீன்களைப்போல எண்ணிக்கையில் அவர்கள் இருப்பர்"** (தொ. நூ 15:5) என்றும் **"ஒரு பெரும் இனத்திற்குத் தந்தை ஆக்குவேன்"** (தொ.நூ 22:17) என்றும் வாக்குரைக்கப்பட்டது. வார்த்தைகள் வாக்கு ஆனவாறு ஆபிரகாமின் நம்பிக்கையும், செயலும் என்றும் நினைவு கூறத்தக்கதாயிற்று. இது கடந்த காலத்திற்கான நினைவு கூறல் மட்டுமல்ல, இவ்வாக்குறுதியை நினைவில் வைத்து எதிர்காலத்திற்கான பாதையை என்றென்றும் திறந்து வைத்து, அதனைத் தேர்ந்து கொள்ள ஒளியூட்டி வருகின்றது. எனவே, எதிர்கால நினைவு என்பதும் நம்பிக்கையுடன் ஒன்றிணைந்தே வருகின்ற ஒன்றுதான் என்பதையும் நம் வாழ்வில் கண்டு கொண்டோம்.

10. ஆபிரகாம் இவ்வுலகுக்காகவே தம்மை அர்ப்பணிக்கவென்று அழைக்கப்பட்டவர். நேர்மை நிறைந்த கடவுளால் கூறப்பட்ட வாக்குகள் அனைத்தும் சுருக்கமாக, ஆனால் விரைவாக, வார்த்தைகளாக புறப்பட, அவை உறுதியாக, நிலைத்ததாக, அசைவுறாத, நீடிய பயணத்திற்குத் துணை செய்வதாக இருப்பதை விசுவாசத்தினால் மட்டுமே அறியமுடிகின்றது. உறுதியும் வலிமையும் வாய்ந்த கற்பாறைகளில் மேல் வேயப்பட்ட நெடுஞ்சாலையில் நம்பகத்தன்மையோடு பயணிப்பதை இவ்வார்த்தைகள் உறுதி செய்கின்றது. விசுவாசம் எனும் வார்த்தையானது **'ஏற்றுக் கொள்ளல்'** எனும் எபிரேய வார்த்தையில் இருந்து உதித்ததாகும். அவ்வார்த்தை கடவுளின் மேன்மையையும் மனிதனின் நம்பிக்கையையும் குறிக்கின்றது. உண்மையும் நேர்மையுமான கடவுளின் கரங்களில் தன்னை ஒப்புவிக்கும் நம்பிக்கை மிகுந்த மனிதன் பலம் பெறுகின்றான். கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளிலும் கூட இவ்விரு பொருட்களைக் கூறும் வார்த்தைகளாக இவை வருகின்றன. கடவுளின் பெயரைக்கொண்ட கிறிஸ்தவ மக்களைப் பெறும் பேறு பெற்ற மக்களென புனிதர் சிறில் கூறுகின்றார். ஏனெனில் அது விசுவாசத்தின் மறுபெயர் என்பதாகும். **"கடவுளையும் அவர் வாக்குறுதியையும் நம்பும் மனிதன் உண்மையானவன் என்றும் தாம் அளித்த வாக்குறுதியை மனிதனுக்கு அளிக்கும்போது கடவுளும் உண்மையானவரே"** என்று புனித அகுஸ்தினார் கூறுகின்றார்.

தொடரும்...



# சிறுவர் பக்கம்

## அன்புப் பிள்ளைகளே!

கிறிஸ்மஸ் வரப்போகின்றதல்லவா? கிறிஸ்மஸ் கொண்டாட ஆயத்தமா? வீட்டில் ஸ்டார் போட்டு, கிறிஸ்மஸ் குடில் கட்டி, அதில் அலங்கார விளக்குகள் மாட்டிவிட்டீர்களா? சரி கிறிஸ்மஸ் குடிலை முதல் முதலாக கட்டியவர் யார் என்று தெரியுமா?

முதன் முதலாக கிறிஸ்மஸ் குடில் செய்தவர் 1223ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் அசிசியார். இவர் கிரகோரி என்னும் நகரிலிருந்த ஒரு குகையில் உயிருள்ள காளையையும், கழுதையையும் கட்டி, கிறிஸ்மஸ் குடில் செய்தார். அதற்குப் பின்னர்தான் கிறிஸ்மஸ் குடில் செய்யும் வழக்கம் வந்தது. கிறிஸ்மஸ் குடிலை நாம் "க்ரிப்" (rib) என்று அழைக்கின்றோம். இது ஒரு பிரஞ்சு மொழி தழுவிய ஆங்கிலச் சொல்லாகும். துருக்கி ஆதிக்கத்திலிருந்த பெத்லகேமிற்குச் செல்ல இயலாத திருப்பயணிகளுக்குத்தான் கிறிஸ்மஸ் குடில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

முற்காலத்தில் குடிலை, தங்கம் வெள்ளி மற்றும் இரத்தினங்களால் அலங்கரித்தனராம். பிற்காலத்தில் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளால் அலங்கரிக்கப்பட்டன. தொடர்ந்து செடி கொடிகள், நட்சத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. கிறிஸ்மஸ் மரம் 13ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி நாட்டில் தொடங்கப்பட்டது. அது விண்ணக மரத்தையும், கொல்கொத்தா சிலுவையையும் குறிக்கும் ஓர் அடையாளமாகும்.

கிறிஸ்மசுக்கு பரிசு வழங்கும் பழக்கம் உண்டா? அன்புப் பிள்ளைகளே, நாம் கிறிஸ்மஸ் விழாவை பயனுள்ள விழாவாக மாற்ற உங்கள் நண்பனுக்கு, ஏழைக்கு, பசியோடு இருப்பவர்களுக்கு எம்மால் இயன்ற, உங்களிடம் உள்ளவற்றை பகிர்ந்து கொள்ளுங்கள். மகிழ்ச்சியோடு இயேசு உங்களிடம் வர.

## விவிலிய நகைச்சுவை

### இயேசுவுக்குப் பிடித்தமான 'செல்" எது?

மாணவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் "இயேசுவுக்குப் பிடித்தமான சொல் எது?" என்று கேட்டேன். Nokia, Samsung, Airtel, Mobital, என்று பல்வேறு பதில்கள் வந்தன. ஆனால் ஒரு மாணவன் "இயேசுவுக்குப் பிடித்தமான செல் **'என்னைப் பின் செல்"** என்பதே என்று பதில் கூறினான்.




## பழமொழிகள்

1) அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிதர்தமும்
2) இட்டுக்கொட்டார் எங்குமில்லை.
3) இளங்கன்று பயமறியாது
4) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லாக்கு
5) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
6) பட்டகாலிலே படும் கெட்டகுடியே கொடும்
7) வேலைக்கள்ளிக்கு பிள்ளை சாட்டு
8) அடாது செய்தால் படாது படுவான்
9) ஆறிலும் சாவு நூறிலும் சாவு

**J.D. எண்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)**

## அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

1) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஆன்றோர் வாக்காகும்.
2) மண்ணிலே வாழும் கண்கண்ட தெய்வங்கள் பெற்றோர்கள்.
3) எம் இதயத்தின் விருப்பங்களை ஈடேற்றி வைக்கின்றார்கள்.
4) இனிய எதிர்காலத்தை நாம் பெறவேண்டி நம்மை வழிப்படுத்துகின்றார்கள்.
5) தாயானவள் நமக்காக நோன்பிருந்து துயில் துறந்து நம்மைக் காக்கின்றாள்.
6) தந்தையோ எம்மைச் சிந்தையிலே கொண்டு செல்வம் தேடுகிறார்.
7) நாம் பெற்றோர் சொற்படி நடக்கவேண்டும்.
8) அவர்களைத் தீய வார்த்தைகளால் நிந்தித்தல் கூடாது.
9) வயதான காலத்தில் அவர்களை அன்புடன் பராமரிக்க வேண்டும்.
10) அவர்களைத் தினம் பேணி ஆண்டவரின் ஆசீர்வாதங்களை பெறுவோம்.

*M. ஜனனி, தரம் – 5, புதுக்கடைப்பங்கு*



## தொப்பி செய்திகள்

1) மனிதன் 3600 ஆண்டுகளாகத் தொப்பி அணிந்து வருகிறான்.
2) உலகில் முதல் தொப்பி தொழிற்சாலை 1857ஆம் ஆண்டு அமெரிக்காவில் டான்பர் என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.
3) சுற்றி விளிம்புள்ள கௌபோய் ரக தொப்பிகள் 1930இல் அறிமுகப்படுத்தப்பட்டன.
4) 17ஆம் நூற்றாண்டு முதல் இராணுவங்களில் தொப்பி அணியும் முறை ஆரம்பமானது.
5) ஜப்பானில் விருந்தினரை உபசரிக்கத் தொப்பியை எடுத்து, கையைக் குவித்து வணங்கும் பழக்கம் உள்ளது

## இரண்டு முட்டாள் ஆடுகள்

அது ஒரு அடர்ந்த காடு அந்த காட்டின் நடுவே ஒரு குறுகிய பாலம் ஒன்று ஆற்றின் நடுவில் இருந்தது. ஒரு நாள் அந்த பாலத்தைக் கடப்பதற்காக இரண்டு ஆடுகள் பாலத்தின் அருகில் வந்து நேரத்தில் ஒருவர் மட்டுமே கடக்கமுடியும். இது தெரிந்தும் இரண்டு ஆடுகளும் பாலத்தைக் கடப்பதற்காக ஒரே நேரத்தில் ஏறி பாலத்தின் நடுவில் வந்து நின்றன.

முதலாவது ஆடு "எனக்கு வழி என்றது. இப்படியே இரண்டு ஆடுகளும் விட்டுக்கொடுக்காமல் சண்டையிடத் தொடங்கின. சண்டையிடும் போது இரண்டு ஆடுகளின் கால்களும் பிடிமாணம் இன்றி ஆற்றில் விழத் தொடங்கின.



கொண்டு இருந்தன. ஒரு ஆடு பாலத்தின் ஒரு முனையிலும் மற்றொன்று மறுமுனையிலும் வந்து நின்றன. அந்த பாலத்தை ஒரே விடு நான் செல்ல வேண்டும்" என்ற உடனே, இரண்டாவது ஆடு "நான் தான் முதலில் வந்தேன். எனக்கு நீ தான் வழி விடவேண்டும்" ஆற்றில் விழுந்தவுடன் இரண்டு ஆடுகளும் தங்கள் செய்த தவறை நினைத்து வருந்தின. இறுதியில் இரண்டு ஆடுகளும் நீரில் மூழ்கி இறந்தன்.

**சிந்தனை**

**விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக விட்டுக் கொடுக்க வேண்டும்.**

## புனித பிரான்சிஸ் அசிசி – 13

ஒரு சமயம் சகோதரர்கள் தங்கள் குடிசையில் செபித்துக்கொண்டிருந்த சமயம், ஒரு விவசாயி தன்னுடைய வீடாக அதைப்பாவித்து, தன் கழுதையோடு அங்கே உரிமையோடு குடியேறினான். ஆனால் பிரான்சிஸ்சோ மற்றச் சகோதரர்களோ அதனால் ஒன்றும் திகிலடையவில்லை. மாறாக, எதுவுமே தமக்குச் சொந்தமில்லை என எண்ணி, தமக்குச் சொந்தமில்லாதது எடுக்கப்பட்டதால் கவலை கொள்ளவில்லை.

பின்னர், அக்குடிசையை விட்டுவிட்டு போர்தின்குலா என்று அழைக்கப்படும் கோவிலுக்குப் பின்னால் குடிபோனார்கள். அக்கோயிலும் அதைச் சுற்றியுள்ள இடமும் ஒரு சந்நியாச மடத்திற்கு உரியதாக இருந்தது. அம்மடத்தின் அதிபர் அக்கோயிலையும் அதைச் சார்ந்த சிறிது நிலத்தையும் பிரான்சிசுக்கு கொடுக்க நினைத்தார். ஆனால் பிரான்சிஸ் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அங்குத் தங்க மட்டும் அனுமதி கேட்டுக் கொண்டார்.

சகோதரர்கள் அக்கோயிலைப் பழுது பார்த்தனர். பின்னர் அதைச் சுற்றிலும் இலைகளாலும் மண்ணாலும் சிறிய குடிசைகள் அமைத்துக் கொண்டனர். தரையில் உறங்குவதற்குச் சிறிது வைக்கோலைக் பரப்பிக்கொண்டனர். தரையையே சிறிதுமேடு பள்ளமாகத் தோண்டி நாற்காலியாகவும், மேசையாகவும் உபயோகித்துக்கொண்டனர். அவர்களது வாழ்வு மிகக் கடினமானதாக இருந்தாலும் அதிகமதிக இளைஞர்கள் அச்சபையில் வந்து சேர்ந்தனர்.

எல்லாச் சகோதரர்களும் குற்றமற்றவர்கள் அல்லர் என, சகோதரர்களிடத்து குற்றம் கண்டபொழுது அதை அமைதியாகத் திருத்தினார் பிரான்சிஸ். ஒரு சகோதரர் தன் போதக வேலையில் மிகச் சிறப்பாக வெற்றிகண்டார். அதைக் கண்டு பிரான்சிஸ் ஒருவேளை அச்சகோதரர் தன் வெற்றியினால் தற்பெருமைக்கு இடமளிக்கலாம் என எண்ணி, அவரை அழைத்து தரையைக் கூட்டவும், மற்றும் சமையல் அறையில் பணியாற்றவும் பணித்தார்.

உழைக்க விரும்பாத இளம் சகோதரர்களை மிகவும் கடுமையாகக் கண்டித்தார். அவர்களை "ஈக்கள்" என அழைத்தார் காரணம் ஈக்கள் உழைக்க வருவதில்லை. உண்ண மட்டுமே வருகின்றன. மேலும் அவர்களைப் புனித பவுலின் வார்த்தைகளால் உழைக்க அழைத்தார். அவ்வார்த்தைகள் "உழைக்க விரும்பாதவன் உண்ணாதிருக்கட்டும்" தொடரும்...

### கேள்வி எண் 13:

1) **தற்பெருமைக்கு இடமளிக்காதிருக்க பிரான்சிஸ் என்ன செய்தார்?**
2) **உழைக்க விரும்பாதவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?**

**அனுப்ப வேண்டிய கடைசி திகதி : 11.12.2013**

### புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பெறுபவர்கள்.

1) **நிலானி பர்னாந்து, தரம் 10F, திருக்குடும்ப கன்னியர் மடம், கொழு –4**
2) **அ.மதுமிகா, தரம் 7, நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை கொழும்பு –13.**
3) **G.B. ஒசான், தரம் 7, புனித பிரான்சிஸ் மறைப்பாடசாலை, கொக்கிராவ, அநுராதபுரம்.**
4) **J.S. ஜான்சி, தரம் 4, புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயம், இரத்தினபுரி.**
5) **நவீனா அஷ்வினி அந்தனி, தரம் 7F, திருக்குடும்பக் கன்னியர் மடம், பம்பலப்பிட்டிய, கொழும்பு – 4**
6) **J.D. எண்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)**

# கத்தோலிக்க திருமறை

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. “கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன”. என்பதன் கருத்து
i) கடவுளின் ஆசீருடனும் விருப்பத்தின்படியும் உலகம் உருவாக்கப்பட்டது என்பது
ii) கடவுள் படைத்த உலகம் மிகவும் பெறுமதி வாய்ந்த செல்வம் என்பது
iii) உலகை வளங்களால் நிரப்பி அதனை ஆசீர்வதித்தார் என்பது
iv) கடவுள் தமது விருப்பத்திற்கு அமைய எல்லாப் படைப்புகளும் உருவாகச் செய்தார் என்பது

2. தொடக்க நூலில் குறிப்பிடப்படும் வானவில்லின் அடையாளத்திற்குப் பின்னணியாக அமைவது இறைவன் .......... உடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையாகும். வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்
i) ஆபிரகாம் ii) நோவா
iii) மோசே iv) யாக்கோபு

3. இயேசுவின் பிறப்பு நமக்கு ஒரு நற்செய்தியாக அமைவது அவர்
i) இறைவனிடம் இருந்து வருபவர் என்பதால்
ii) பழைய உடன்படிக்கையின் இறைவாக்குகளை நிறைவு செய்வது பற்றியதாகும்.
iii) உலகிற்கு விடுதலையை உருவாக்கியதால்
iv) தாவீதின் தலைமுறையிலிருந்து வருபவர் என்பதால்

4. இயேசு தோற்றம் மாறியபோது மோசேயுடனும், எலியாவுடனும் நடந்த உரையாடலின் பிரதான தலைப்பு
i) பத்துக்கட்டளைகளைச் சரியாகப் பின்பற்றுவது பற்றியதாகும்
ii) முன்னைய இறைவாக்கினர்கள் கூறிய இறைவாக்குகளை நிறைவு செய்வது பற்றியதாகும்
iii) இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றியதாகும்
iv) இயேசு ஜெருசலேமில் நிறைவேற்ற இருந்த வாழ்க்கைப் பலியை பற்றியதாகும்.

5. வார்த்தையானவர் மனுவுடல் எடுத்து நம்மிடையே குடிகொண்டார். கிறிஸ்தவ ஒன்றியக் குழுவின் கலந்துரையாடலில், முதியவர் ஒருவர் மேற்குறிப்பிட்ட நற்செய்திப் பகுதிக்குக் கொடுத்த விளக்கம் பின்வருமாறு அவற்றில் மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுவது
i) கிறிஸ்துவில் இறைவன் மனுவுரு எடுத்தமை
ii) இறைவார்த்தை மனித உள்ளங்களில் நுழைந்தமை
iii) இறைவார்த்தையை எப்போதும் வாசிக்கத் தூண்டப்படுதல்
iv) இறைவார்த்தையினூடே உண்மைக்குச் சான்று பகருதல்

6. “மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் .........” வெற்றிடத்திற்குப் பொருத்தமாக அமைவது
i) மறையைப் போதிக்க வந்தார்
ii) தம் உயிரைக் கொடுப்பதற்கு வந்தார்
iii) இறை அரசைப் பரப்ப வந்தார்
iv) இறை அன்பினைக் காண்பிக்க வந்தார்

7. படைப்பின் ஊடாக இறைவனின் மகிமையைக் காணும் நாம் ......... வழியாக இறைவனைச் சந்திக்கின்றோம். வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்
i) புதுமைகள் ii) அடையாளங்கள்
iii) செபத்தின் iv) சட்டங்கள்

8. பாடசாலையில் கற்கும் உம்மிடம் விஞ்ஞானம் பற்றி இருக்க வேண்டிய பார்வை என்ன?
i) பரந்த உலகத்திற்குள் நுழையும் வாயிலொன்றாக
ii) மனித வாழ்வை இன்பமடையச் செய்வதொன்றாக
iii) மனித முயற்சியின் வெற்றியொன்றாக
iv) மனிதன் பெற்றுள்ள ஞானத்தின் வெளிப்பாடொன்றாக

9. கிறிஸ்தவன் தன் பாவங்களைக் குருவானவரிடம் வெளிப்படுத்துவது.
i) இறைவனுக்கும் சமூகத்திற்கும் எதிராக பாவம் செய்வதால் ஆகும்
ii) பகிரங்கமாக ஒருவரிடத்தில் பாவங்களை கூறுவது வெட்கத்திற்கு இடமாக இருப்பதாலாகும்
iii) தனது பாவங்களை இன்னுமொருவரிடத்தில் வெளிப்படுத்துவதில் உள்ள பயத்தினாலாகும்
iv) தனது வாழ்வில் தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகும்

10. செபத்தினாலும், தவச்செயல்கள் மூலமாகவும் உலகில் பாவசக்திகளை தோற்கடிக்க “மரியாயின் மாசற்ற இருதய சேனை” என்ற அமைப்பை நிறுவியவர் யார்?
i) திருத்தந்தை XII ஆம் பத்திநாதர்
ii) மக்ஸிமிலியன் கோள்பே அடிகளார்
iii) திருத்தந்தை IIஆம் அருளப்பர் சின்னப்பர்
iv) அன்னை தெரேசா

11. குருத்துவ நிலைகள் மூன்றும் ஆவன
i) அரச - குருத்துவ - இறைவாக்குப்பணி
ii) இல்லற - துறவற - குருத்துவம்
iii) ஆயர் - குரு - திருத்தொண்டர்
iv) ஆயர் - கருதினால் - திருத்தந்தை

12. இந்நாட்டில் ஒல்லாந்தர் ஆட்சிக்குள் இருந்த பகுதிகளில் கல்வியைப் பற்றி எடுக்கப்பட்ட தீர்மானம் யாதெனில்
i) ஒல்லாந்த மொழியைக் கட்டாய பாடமாக்குதல்
ii) மறைப் பாடசாலைகளை முன்னேற்றுதல்
iii) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளை ஆரம்பித்தல்
iv) கத்தோலிக்க திருமறையைக் கற்பித்தலைத் தடைசெய்தல்

13. துறவற வார்த்தைப்பாடுகளாக அமைவன
i) ஏழ்மை - கற்பு - கீழ்ப்படிதல்
ii) ஏழ்மை - கீழ்ப்படிதல் - தாழ்மை
iii) விரதத்துவம் - கீழ்ப்படிதல் - வீரம்
iv) வீரம் - கீழ்ப்படிதல் - தாழ்மை

14. எம்மாவுஸ் ஊருக்கு சென்ற திருத்தூதர்கள் இருவரும் அன்றே மீண்டும் திரும்பியெருசலேமுக்குப் புறப்பட்டது
i) இயேசுவின் உடலைக் கல்லறையில் காணவில்லை என்ற செய்தி அறிய வந்ததால்
ii) இயேசு மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தார் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்ததால்
iii) ஏனைய திருத்தூதர்கள் அவர்களுடைய வரவை எதிர்பார்த்திருந்ததால்
iv) உயிர்த்த இயேசுவை அவர்கள் கண்டதாக ஏனைய திருத்தூதர்களுக்கு அறிவிக்க

15. பிறவிக் குருடனாக இருந்த ஒருவரைக் குணமாக்கிய புதுமையின் மூலம் விளங்குவது
i) மக்கள் மீதுள்ள இறைவனின் எல்லையற்ற இரக்கமுள்ள அன்பு
ii) படைப்பைப் புதுப்பிக்க படைத்தவரால் முடியும் என்பது
iii) இறைமகன் யூத மக்கள் மத்தியில் தனது புகழ் பரவச் செய்தார் என்பது
iv) மனிதனிடத்தில் விசுவாசத்தை வளர்க்க இறைவனால் முடியும் என்பது

16. திருச்சபையின் ஆரம்ப நாளாக கணிக்கப்படுவது
i) விண்ணேற்றமடைந்த நாளாகும்
ii) பெந்தகோஸ்தே நாளாகும்
iii) பாஸ்கா விழாவாகும்
iv) வெற்றி ஆர்ப்பரிப்போடு யெருசலேமுக்கு நுழைந்த நாளாகும்.

17. யாக்கோபின் நடத்தை காரணமாக ஏசாய்க்கு விளைந்த அநீதியானது
i) வழிமுறையில் வரும் தலைமைத்துவத்தை இழந்தமை
ii) தனது சகோதரனை இழந்தமை
iii) தனது தந்தையின் ஆசீரை இழந்தமை
iv) தான் வாழ்ந்த பகுதியிலிருந்து ஓடிச் செல்ல நேர்ந்தமை

18. “தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார்” எனத் தூய பவுல் கூறும் இவ் அறிவுரை எழுதப்பட்டுள்ள திருமுகம் ஆவது
i) கலாத்தியர் ii) உரோமையர்
iii) 2 கொரிந்தியர் iv) 1 கொரிந்தியர்

19. “ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது” இவ்வாறு இயேசு கூறியது
i) நிக்கோதேமிற்கு ii) பேதுருவிற்கு
iii) சக்கேயுவிற்கு iv) தோமாவிற்கு

20. அஜித் தனது தகப்பனுக்கு நோயில்பூசுதல் என்னும் அருளடையாளத்தை வழங்கப் பங்குத் தந்தையை அழைத்து வந்தது
i) பரிசுத்த தைலத்தைத் தந்தைக்கு பூசுவதற்காக
ii) தனது தகப்பனுக்கு ஆன்ம, உடல், உள நலத்தைப் பெற்றுக் கொடுக்கும் எதிர்பார்ப்பில்
iii) தனது குடும்ப உறுப்பினர்களைத் தேற்றுவதற்காக
iv) ஏனைய அருளடையாளங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால்



# மாணவர் பக்கம்

தொகுப்பு :
மறையாசிரியர் பேணடேற் சாந்தி

## கொண்டாடுவோம் கிறிஸ்மஸ்



உலகில் வாழும் எல்லோரும் சமயம், மொழி, இனம், நாடு என்ற பாகுபாடு கடந்து எதிர்பார்க்கும் ஒரு விழா தான் கிறிஸ்மஸ். கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள், வீட்டு அலங்காரம், கிறிஸ்மஸ் மரம், குடில், நட்சத்திரம், புதிய ஆடைகள், பரிசுப் -பொருட்கள் விழாவிற்கான திட்டங்கள் என எங்கும் விரைவில் பரபரப்புத் தெரியும். இதெல்லாம் மனிதர் என்ற முறையில் எமக்கு அவசியம்.

ஆனால் இவைகள் மட்டுமே கிறிஸ்து பிறப்பு விழாவாக முடியாது. இயேசுவின் பிறப்பு மிகவும் எளிமையான பிறப்பு. மக்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த மெசியா ஏழையாகப் பிறந்தார். மாட்டுக் கொட்டிலில் பிறந்து, எல்லோருக்கும், சிறப்பாக ஏழைகளுக்கு கடவுளின் பார்வையில் சிறப்பிடம் உண்டு எனக் காட்டினார். ஏழ்மை, எளிமை என்ற இரண்டும் கடவுளைச் சார்ந்து வாழத் தூண்டுகின்றன. இவ்விரு மதிப்பீடுகளையும் தமதாக்கிட இயேசுவைப்போல பிறரின் வாழ்வுக்கு, முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பதே உண்மையான கிறிஸ்மஸ். வெளி ஆடம்பரங்களை விட்டுவிட்டு பிறரன்பு உள்ள கொண்டாட்டமாக கொண்டாடுவோம் நத்தாரை.

## அறிந்து கொள்ளுங்கள்

### நோபல் பரிசு பெற்றவர்கள்

**ரவீந்திரநாத் தாகூர்**
இலக்கியத்திற்கு “கீதாஞ்சலி” என்ற நூலுக்காக 1913ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் இவர்.

**மார்ட்டின் லூதர் சிங்**
போரட்டங்களை அமைதியாக நடத்தி உலக சமாதானத்திற்கான பரிசை 1964ஆம் ஆண்டு அமெரிக்காவின் காந்தி என்று போற்றப்படும் மார்ட்டின் லூதர்சிங்கிற்கு கிடைத்தது.

**அன்னை தெரேசா**
உலக புகழ்பெற்ற சமூக சேவகி அன்னை தெரேசாவுக்கு 1979ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**நெல்சன் மண்டேலா**
1993ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா சமாதானத்திற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**பாரக் ஒபமா**
2009ஆம் ஆண்டு சமாதானத்திற்காக நோபல் பரிசு அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபமா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**தகவல் :**
திருமதி L. ஜெயசீலி
லோறன்ஸ்,
கொழும்பு - 13.

# ஆயரும் மறைவல்லுநருமான
# தூய அம்புறோஸ்

மார்கழி 07 கி.பி 340 - 397



இம்மாதத்தில் ✠ பேதுரு



கி.பி 340இல் இவர் பிறந்தபோது இவரின் தந்தை பிரான்சில் ஆளுநராகப் பணியாற்றினார். தந்தை மகனைச் சிறுவயதிலேயே விட்டுவிட்டு இறந்துவிடவே தாயுடன் உரோமை வந்து சேர்ந்தார். தாயும் சகோதரி புனித மர்ச் செலினாவும் இவரை மிகக் கவனமாக ஞான வாழ்வில் வளர்த்தனர். சிறுவனாயிருக்கும்போது கிரேக்க மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததால் கவிஞராகவும், சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். மன்னன் வலேரியன் இவரது திறமைக்குப் பரிசளிப்பதுபோல மிலானில் இருக்கச் செய்து ஆளுநராக ஆக்கினார்.

மிலானில் ஆரியப் பதித ஆயர் இறந்தபின் பதவியிடத்தை நிரப்புவதில் ஆரிய ஆயரா? கத்தோலிக்க ஆயரா? என்ற மோதல் நிலவவே அதற்கு முடிவுகாண ஒரு பேரவை நடந்தது. அம்புறோஸ் மிகத் திறமையாகப் பேசி அனைவருடையவும் பாராட்டைப் பெற்றார். கூட்டத்தில் “அம்புறோஸ் ஆயர், அம்புறோஸ் ஆயர்” என்ற பேரோசை வானைப் பிளந்தது. அம்புறோஸ் அச்சமடைந்தார். காரணம் கத்தோலிக்கராக வாழ்ந்தாலும் இன்னும் அவர் திருமுழுக்குப் பெறவில்லை. நடந்த விவரங்கள் அனைத்தும் வலேரியனுக்கு தெரிவிக்கப்பட்டபோது மகிழ்ச்சி வெள்ளத்தில் “நான் நியமித்த ஆளுநரே ஆயர் பதவிக்கு தேர்ந்துகொள்ளப்பட்டார்” எனப் பூரிப்படைந்தார். அம்புறோஸ் இதை ஏற்றுக் கொள்ளாமல் லியோன்சியஸ் என்ற உயர் அலுவலரின் வீட்டில் ஓடி ஒளிந்து கொண்டார். லியோன்சியஸ் இதைக்கேள்விப்பட்ட பின் அம்புறோஸ் ஆயர் பதவிக்கு தப்பிக்க இயலவில்லை. அம்புறோஸ் தமக்கு விவிலிய ஞானம் மிகுதியாக இல்லையே என்று சொல்லி விவிலியத்தையும், மறைவல்லுநர்களின் நூல்களையும் கற்றுக்கொள்வதில் மிகவும் அக்கறை செலுத்தினார். நாள்தோறும் மக்களுக்காக திருப்பலி நிறைவேற்றினார். மக்களின் நலனுக்காகவே இவர் ஆயராக இருப்பதை மக்கள் மகிழ்வோடு உணர்ந்தனர். மறையுரையில் இறையன்பின் பொருட்டுத் தெரிந்து கொள்ளும் கன்னிகையின் மேன்மைபற்றி அடிக்கடி பேசுவார். பெண்கள் ஏராளமானவர்கள் இம்மறையுரையைக் கேட்டுத் துறவைத் தெரிந்து கொள்கின்றார்கள் என்று சொல்லி அன்னையர் பலர் தங்கள் பெண்களை இம்மறையுரைகளைக் கேட்கவிடவில்லை. இவரது காலத்தில் ஆரிய பதிதம் இங்குமங்குமாக தலைவிரித்தாடியது. அரசர்கள் சிலரும் இதற்குத் துணைபோனார்கள். அம்புறோஸ் அரசனை அணுகி திருச்சபையின் அலுவல்களில் அரசன் தலையிடக்கூடாது என்று கூறினார். “அரசர் திருச்சபைக்குக் கட்டுப்பட்டவர் அவர் திருச்சபையின் மீது ஏறி உட்காரக்கூடாது” என்று முழங்கினார். மன்னன் தியடோசியனுக்கும் இவருக்கும் இடையில் கருத்துவேறுபாடு நிலவியது. இவர் திருச்சபையின் ஒழுங்குகளின் படி தம் நிலையில் நிலைத்து நின்றார். மன்னன் மனம்மாறினான். தன் பாவங்களுக்காக மனம்வருந்தி மனமாற்றம் பெற்றான். அரசன் ஆயர் அம்புறோசிடம் கண்ணியமாக நடந்துகொண்டார். “அம்புறோசைப் போல ஆயர் பதவிக்குரியவர்களை நான் பார்த்ததில்லை” என்று மனம் விட்டுப் பாராட்டினார். இவர் கி.பி. 397ஆம் ஆண்டு சித்திரை 4இல் பெரிய வெள்ளியன்று இறையடி சேர்ந்தார்.

# இறை ஊழியர் அன்னை பேர்ணாடா கைம்காட்னரின் விண்ணகப் பிறப்பின் 150வது ஆண்டு நிறைவு. (1863 –2013)



அருட்சகோதரி. றேபேக்கா சூசையா. தி.சி

திருச்சிலுவை கன்னியர் (மென்சிங்கன்) சுவிட்சலாந்து சபையானது இற்றைக்கு எண்பத்து மூன்று (1930) ஆண்டுகளுக்கு முன் இலங்கை மண்ணில் காலடி பதித்துள்ளது. ஆயினும் இச்சபையின் தோற்றம் பற்றி முன்னோக்கிப் பார்க்கையில், எமது திருச்சிலுவைக் கன்னியர் சபையானது ஐரோப்பாக் கண்டத்திலே சுவிட்சலாந்திலுள்ள மென்சிங்கன் எனும் நகரிலே அருட்தந்தை தியோடோசியஸ் புளோறன்ரனி (கப்புச்சின்) அடிகளாரால் 1844ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. அருட்தந்தையின் ஆன்மீக வாஞ்சையாலும், அன்றைய சமுதாய சீர்கேடான பிரான்சிய புரட்சியின் பின் ஏற்பட்ட தாக்கத்தாலும், மனித வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தையும், மனதிற் கொண்டு ஒரு நல்ல தாயால் தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும், என்ற எண்ணத்தினால் உருவானதே எமது திருச்சிலுவை கன்னியர் சபையாகும். இந்த மாற்றத்தையும், எண்ணத்தையும் பலர் சந்தேகக் கண்ணுடன் பார்த்த போதிலும், அடிகளாரின் தீர்மானத்தில் எந்த வித மாற்றமும் இருக்கவில்லை. “காலத்தின் தேவை தான் கடவுளின் சித்தம்”(The Need of the time is the will of God) எனக் கொண்டு தனது செயற்பாட்டினை முழுமுச்சுடன் முன்னெடுத்துச் சென்றார். இந்த சந்தர்ப்பத்தில் தான் அருட்தந்தையின் ஆன்மீக வலையில் எம் அன்னை பேர்ணாடா சிக்கிக் கொண்டார். சமுதாயத்தின் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப வீரநடைபோடும் பெண் என்ற போர்வையில் விசுவாசத்துடன் மக்களின் தேவைக்கு விடைகொடுக்கும் பெண்ணாகத் திகழ்ந்த ஒப்பற்ற அன்னை தான் பேர்ணாடா அவர்கள். மரிய அன்னா கைம்காட்னர் என்ற இயற்பெயரைக் கொண்டவர் தான் அன்னை பேர்ணாடா. இவரது வாழ்க்கை வரலாற்றையும், ஆன்மீக வளர்ச்சியையும், தனித்துவப் பண்புகளையும் சற்று துல்லியமாக ஆராய்வது இன்றைய நாளில் சாலச் சிறந்ததொன்றாகும்.

1822ம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்து ஆறாம் நாள் சுவிட்சலாந்திலுள்ள பிசிலிஸ்பேக் கன்ரன் ஆர்கவ் என்னுமிடத்தில் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை சாதாரண ஒரு ஏழை சப்பாத்துத் தைக்கும் தொழிலாளி. ஓர் உயர்ந்த இடத்தில் திருமணமானார். இவர்களுக்கு ஐந்து பெண்குழந்தைகளும், ஒரே ஆண்மகனும். அன்னை பேர்ணாடா நான்காவது குழந்தையாவார். இவர் தனது ஆரம்பக்கல்வியை 1829-1837 வரை பிசிலிஸ்பேக்கில் கற்றார். 1837-1838இல் தனது உயர்க்கல்வியை அங்கேயே தொடர்ந்தார். 1839-1940இல் அருட்தந்தை றொகணர் மூலமாக அன்னை பேர்ணாடா அவர்கள் அருட்தந்தை தியோடோசியஸ் அவர்களுக்கு அறிமுகமானார். இந்த வேளையில் இளம் பெண்ணாகத் திகழ்ந்த அன்னை பேர்ணாடா அவர்கள் தன்னை இறைபணிக்கு அர்ப்பணிக்கும் எண்ணம் கொண்டிருந்தார் என்பது தெரிய வந்தது. அவரோடு இன்னும் இரண்டு இளம் பெண்கள் பெலிசியானா, கொர்னேலியா இணைந்து மூவரும் புதிதாகக் கட்டப்பட்ட பாடசாலையின் தங்கு விடுதியில் தங்கி தமது மேற்படிப்பைத் தொடர்ந்தார்கள். 1840இல் இப்பாடசாலைகள் அன்றைய அரசாங்கத்தினால் மூடப்பட்டன. இது அங்கிருந்த எட்டு துறவற மடங்களையும் கடுமையாகத் தாக்கியது. அதுமட்டுமன்றி அருட்தந்தை தியோடோசியஸ் அவர்களையும் ஓர் இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளியது. இதன் விளைவாக எல்லா கப்புச்சின் குருக்களும் பிரான்ஸ் நாட்டிற்கு தப்பியோடினார். இந்த வேளையில் அருட்தந்தை தியோடோசியஸ் பிரான்சில் ரிபல்வெலியில் உள்ள 400 பேரைக் கொண்ட இறைபராமரிப்பு அருட்சகோதரிகள் சபையினரைச் சந்தித்தார். இவர்கள் 200 பாடசாலைகளை நடாத்துவது கண்டு, மீண்டும் தான் சுவிட்லாந்திற்குச் சென்று துறவற சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என திடசங்கற்பம் கொண்டார். 1841-1843இல் அன்னை பேர்ணாடாவும் அவரது இரு தோழிகளும் தமது மேற்படிப்பைத் தொடர்ந்து, 1844இல் துறவற வாழ்விற்கான பயிற்சியையும், நவசன்னியாச பயிற்சியையும் இறைபராமரிப்பு கன்னியர் சபையில் நிறைவேற்றி முடித்தனர். இவர்கள் மூவரையும் அருட்தந்தை தியோடோசியஸ் அவர்கள் மீண்டும் சுவிட்சலாந்திற்கு அழைத்து வந்தார். 1844, புரட்டாதி மாதம் வந்த இவர்கள் அருட்தந்தை ஏற்கனவே சொந்தமாகத் தயாரித்து வைத்திருந்த துறவிகளுக்கான வார்த்தைப்பாட்டின் பிரகாரம் 1844 ஐப்பசி மாதம் 16ம் நாள் தமது முதலாவது வார்த்தைப்பாட்டை மேற்கொண்டனர். அடுத்த நாளே அன்னை பேர்ணாடா அவர்கள் பிரதம தலைவியாக நியமிக்கப்பட்டு “திருச்சிலுவைக் கன்னியர்” சபை என நாமம் சூட்டப்பட்டு புதிய துறவற சபையாக எமது திருச்சிலுவைக் கன்னியர் சபை உருவாக்கப்பட்டது.

இவ்வாறாக எமது திருச்சிலுவைக் கன்னியர் சபையானது அன்னை பேர்ணாடா அவர்களைத் துணை ஸ்தாபகராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய ஓர் அன்னையின் விண்ணக வாழ்வின் 150வது ஆண்டைத்தான் உலகம் பூராகவும் உள்ள திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாம் இன்று கொண்டாடுகின்றோம். அன்னை பேர்ணாடாவின் ஆன்மீகப் பயணம் இன்று எம் வாழ்வில் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலை. அன்னையின் ஒப்பற்ற ஆன்மீக வாழ்வையும் அவருடைய ஆளுமைப் பண்பையும் பற்றி நாம் சற்று ஆராயும் போதில், அன்னை அவர்கள் ஆண்டவரின் விருப்பத்திற்கு எப்போதும் தடையாக இருந்ததில்லை. தன்னையே அதற்கு அடிபணிய வைப்பதுடன், தான் வாழும் சமூகம், தனது குழுமம் அனைத்தையும் வாழவைக்க வேண்டும் என்ற வாஞ்சையுடன் திகழ்ந்தார். ஆயினும் பலதரப்பட்ட திட்டங்கள், பலருடைய முன்னெடுப்புக்கள் அவருடைய சொந்த ஆளுமையுடன் போட்டி போட்டாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெண்ணுக்கு அவை ஓர் சவாலாகவே அமைந்தது. இது இவருடைய வாழ்வில் ஏற்பட்ட இருண்ட சூழ்நிலையாக மாறியது. அதுமட்டுமன்றி அன்னையின் விருப்பத்திற்கு சவாலாக பலர் எழுந்தனர். அத்தோடு கூடவே அவரது உடல் நலமும் தடைக் கற்களாக மாறியது. எது எவ்வாறு இருப்பினும் ஆண்டவரின் சித்தம் எது எனக்கண்டு, தனது ஆன்மீகத் தந்தை புனித பிரான்சிஸ் அசிசியாருடைய வாழ்வைப் பின்பற்றி அன்றைய சவால்களையும், அதற்கு எதிராக நின்ற இளம் சமூகத்தையும் வெற்றிகொன்டார். சிலுவையில் அறையுண்ட இயேசுவின் மீது கொண்ட பற்றுறுதி எந்தத் தடைக் கற்களையும், சுவர்களையும் தகர்த்தெறியக் கூடிய சக்தியைக் கொடுத்தது. இறைவனிடத்தில் தளம்பல் இல்லாத ஒரு பற்றுறுதி அன்னையிடத்தில் காணப்பட்டது. எல்லாவற்றிக்கும் மேலாக இறைவனையே தந்தையாகக் கொண்டு, இயேசு சிலுவையில் தனது பகைவரை மன்னித்தது போல தானும் தனது பகைவரை மன்னிக்கும் மனப்பக்குவத்தை தரும்படி வேண்டினார். பழிவாங்கும் எண்ணம் இல்லாது அனைவரையும் அன்பு செய்து வாழவேண்டும், பரிவு கொண்ட

தொடர்ச்சி 15ஆம் பக்கம்...



# நம்பிக்கை ஆண்டின் நிறைவு, நமது நம்பிக்கை வாழ்வின் நிறைவா?



ஆக்கம் : அருட்பணி. யோ. ராஜ் கிளேயர் அமதி.

நம்பிக்கை ஆண்டின் நிறைவு:
நமது நம்பிக்கை வாழ்வின் நிறைவா?
தொடர் பயணம் :
சிலுவை வரை சென்ற
மரியாளைப் போன்று

**'நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி, கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை'(எபி.11:1).** மனித வாழ்வில் நம்பிக்கை தவிர்க்க முடியாத ஒன்றாகி மனிதத்துடன் கலந்துவிட்டுள்ளது. குழந்தை தாயின் மீது நம்பிக்கை, நோயாளி வைத்தியர் மீது நம்பிக்கை, மாணவன் ஆசிரியர் மீது நம்பிக்கை என இத்தொடர் சங்கிலி போய்க்கொண்டே இருக்கிறது. இருப்பினும், ஆங்காங்கே அவநம்பிக்கையும், நம்பிக்கைத் துரோகங்களும் முளை அரும்பி, கிளைவிட்டு, விழுது விட்டு வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் மனிதகுலம் இறைவன் மீது கொண்ட நம்பிக்கைக்கு எல்லையே இல்லை. மீட்பு வரலாற்றில் **'விசுவாசத்தின் தந்தை'** என்று அழைக்கப்படும் ஆபிரகாமின் வாழ்வில் இருந்து விவிலியத்தின் ஒவ்வொரு அத்தியாயமும், ஏன், ஒவ்வொரு பக்கமும் நம்பிக்கையை அடிப்படையாகவும் அத்திவாரமாகவும் கொண்டுள்ளது. அதே நம்பிக்கையை நாமும் வாழ, வாழ்ந்து அனுபவிக்க, சாட்சிகளாக்கப்பட அழைக்கப்பட்டோம். விஷேடவிதமாக இந்த நம்பிக்கை ஆண்டில் இவ் அழைப்பை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆழமாக்க, அனுபவிக்க, அழைக்கப்பட்டிருந்தோம். நாம் ஒவ்வொருவரும் அனுபவித்த நம்பிக்கையின் ஆழத்தை எம் குடும்பங்களிலும், பங்கிலும் பகிர்ந்து சாட்சிகளாக வாழ இத்தொடர் பயணம் எம்மை அழைக்கின்றது.

### 'சோதித்து பார்க்கப்படாத நம்பிக்கை பயனற்றது'

இறை நம்பிக்கையும் மனித போராட்டமும் பின் நவீனத்துவ உலகின் (Post Modern wordl) இணை பிரியா எதிரிகளாகவும், ஒன்றை ஒன்று சந்திக்க முடியாத நண்பர்களாகவும் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. சோதித்து பார்க்கப்படாத **'நம்பிக்கை'** பயனற்றது. எமது கிறிஸ்தவ விசுவாசம் சோதித்து பார்க்கப்படவில்லை என்றால் அது வளராத பயிராகி காய்ந்து மடிந்துவிடும். எமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், சோதனைகள் பேரலைகளாக வரும் போது எமது உள்ளத்தின் உணர்வுகள் என்ன? **'கடவுள் இருக்கின்றாரா?'** ஏன் எனது செபத்திற்கு செவிகொடுக்கவில்லை? **'நான் என்ன குற்றம் செய்து விட்டேன்?'** இவ்வாறான கேள்விக்கணைகள் எம்மை, எமது வாழ்வை ஆட்டம் காண வைக்கின்றது. இவை எல்லாவற்றிற்கும் விடை எங்கே? யார் தருவார்?

### இறைவார்த்தை எமக்கு உணவாகின்றது

இயேசுவின் சீடர்கள் அவருடன் சேர்ந்து கடல் பயணம் ஒன்றை மேற்கொள்ளும் போது, பெரும் புயற்காற்றின் மத்தியிலும் இயேசு தூங்கிக்கொண்டிருந்தார் (மாற்.4:35-41). அப்பொழுதெல்லாம் சீடர்களுடைய அங்கலாய்ப்பு எப்படி இருந்தது? **'போதகரே சாகப்போகிறோமே! உமக்கு கவலையில்லையா'?.** இன்றும் அப்பேர்பட்ட கிறிஸ்தவ சீடர்கள் எம் மத்தியில் இல்லாமல் இல்லை. **'ஆண்டவரே உம் மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்தோமே', 'தவறாது திருப்பலிக்கு சென்றோமே', 'உமக்கென்றே பணிகள் பல புரிந்தோமே',** ஆனால் **'ஏன்' 'ஏன்' ஆண்டவரே எனக்கு இப்படி'?' 'எனது செபம் கேட்கவில்லையா?'** இப்படியாக பல்லாயிரக்கணக்கான கேள்விகளை இறைவனிடத்தில் கேட்பதாக நினைத்து, எம்மையே நாம் கேட்டுக்கொள்கிறோம். இறை தந்தை எம்மை சோதிப்பதாக நினைக்கின்றோம், கைவிட்டு விட்டதாக புலம்புகின்றோம். (1கொரி.10:13) எமக்கு பலமூட்டும் வார்த்தையாக அமைகின்றது. **'உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார், சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார்'** இவ்வாறாக இறைவனுடைய வாக்கு எப்போதும் மாறாததாக இருக்கின்றது. நமது வானகத்தந்தை வாக்கு பிரளாதவர், என்றென்றைக்கும் மாறாத தேவன். அவர் எம்மை சோதனையிலேயே மூழ்கிய படி வாழ விட்டுவிடமாட்டார். **'பொய் சொல்வதற்குக் கடவுள் மனிதன் அல்லர்: மனத்தை மாற்றிக்கொள்ள ஒரு மனிதப் பிறவியும் அல்லர். அவர் சொல்லியதைச் செய்யாமலிருப்பாரா? அல்லது உரைத்ததை நிறைவேற்றாமலிருப்பாரா?' (எண்.23:19).** கடவுள் ஒருவரை சோதிப்பது அவரைப் பலப்படுத்தவே, நம் ஒவ்வொருவருடையவும் விசுவாசம் பலப்படுத்தப்பட வேண்டும் என்றால் அது சோதிக்கப்பட வேண்டும். யூதித்து புத்தகம் 8:25-27 வார்த்தைகள் நமக்கு பலம் கொடுக்கும் மருந்தாகிறது. **'எனினும் நம் கடவுளாகிய ஆண்டவருக்கு நன்றிசெலுத்துவோம்,'.** ஆண்டவர் இவ்வாறு அவர்களின் உள்ளங்களைச் சோதித்தறியும் பொருட்டு அவர்களை நெருப்பில் புடமிட்டது போல நம்மைப் புடமிடவில்லை, நம்மைப் பழிவாங்கவுமில்லை. ஆனால், தமக்கு நெருக்கமாய் உள்ளோரை எச்சரிக்கும்படி தண்டிக்கிறார். ஆகவே இவ்வார்த்தைகளின் ஒளியில், எப்போதெல்லாம் நாம் சோதிக்கப்படுகின்றோமோ அப்போதெல்லாம், ஆண்டவருக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம். ஏனெனில் எம்மை தமக்கு நெருக்கமாய் உள்ளவர்களாக, தமக்கு சொந்தமான பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். சீராக் புத்தகம் 2:1-18 வார்த்தைகள் ஆண்டவரிடம் பற்றுறுதி கொள்ளும் மக்களைப் பற்றி எடுத்துரைக்கின்றது. **'நெருப்பில் பொன் புடமிடப்படுகிறது, ஏற்புடைய மனிதர் மானக்கேடு எனும் உலையில் சோதித்துப் பார்க்கப்படுகின்றனர்' (சீராக்.2:4-5).**

### 'நாம் என்ன செய்ய வேண்டும்?'

**'இறைவார்த்தை உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது'.** கிறிஸ்தவ வாழ்வுக்கு உணவாகவும் பானமாகவும் அமைவது இறைவார்ததையே. நாம் எம்முடைய தினசரி வாழ்வில் இறைவார்த்தையை வாசிக்கின்றோம், கேட்கின்றோம், ஆனால் எம்முடைய வாழ்வில் அதைக் கொண்டு வாழ, நடைமுறைப்படுத்த பின் நிற்கின்றோம். **'மேற்கூறப்பட்ட இறைவார்த்தைகள் எல்லாம் இறைவார்த்தைகளாகவே இருக்கின்றன, சிறிது நடைமுறைக்கு வாருங்கள் பார்க்கலாம்'. 'நமது நம்பிக்கையை ஆழப்படுத்த, சோதனையில் துவண்டு விடாமல் இறைவனையே பற்றிக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?'** என பல உள்ளங்களிலே கேள்வி எழலாம். இதற்கும் இறைவார்த்தையே எமக்கு உதவி செய்யும். மாற்கு 10:17-22ல் வரும் செல்வரும் இதே கேள்வியைத் தான் அன்று இயேசுவிடம் கேட்டார். **'நான் என்ன செய்ய வேண்டும்?'** அந்த செல்வந்தன் சிறு வயதிலிருந்தே கட்டளைகளை கிரமமாக கடைப்பிடித்து வந்தவன், ஆனால் இயேசுவின் பார்வையில் அவனிடம் குறைபாடு இருந்தது. அவனிடம் இருந்தவற்றை எல்லாம் விட்டுவிட்டு வரும்படி அழைக்கப்பட்டான். முடியவில்லை" அவனால் தமது முக்கியத்துவமான பொருட்களை, செல்வங்களை விட்டுவிட்டு தமது பயணத்தை தொடர முடியவில்லை. எமது செல்வங்கள் என்ன? நாம் இறுக பிடித்திருக்கும் கொள்கைகள் தான் என்ன? நமக்கென்று நாம் வகுத்துக்கொண்ட குட்டிக் குட்டி கடவுள்கள் என்ன? யார்?, கடவுளைப்பற்றி நாம் வகுத்துக் கொள்ளும் கொள்கைகள், எதிர்பார்ப்புக்கள் என்ன? எம்மை அடிமைப்படுத்தும் உலக போக்குகள் தான் என்னென்ன? எமது அபிலாசைகள் எவை? இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு இறைவனே நீர் தாம் எம் அடைக்கலம் என்ற அசையாத **'நம்பிக்கை'** உடன் வாழும் போது நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றோம். இவ் ஏற்புடைமையில் இருந்து நாம் இறைவனுக்கு உரியவர்களாகவும், அவருடைய மாட்சியில் பங்கு பெற தகுதி பெறுகின்றோம் (உரோ.8:30). எனவே நாம் ஏற்புடைய மனிதராகையால் சோதித்துப் பார்க்கப்படுகின்றோம் (சீராக் 2:5). எமது விசுவாசம் சவாலுக்கு உள்ளாக்கப்படுகின்றது. நாம் தூயோராய் வாழும் படியும், இறைவனுக்கு நெருக்கமாய் இருக்கும் படியும் எமது விசுவாச வாழ்வு, கிறிஸ்தவ வாழ்வு நாளாந்த மனித வாழ்வு சோதனை நிறைந்ததாக அமைந்து விடுகின்றது.

### மரியன்னை காட்டிய வழி

**'நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'** (லூக்.1:38) என மரியன்னை **'ஆம்'** என்று சொல்லி அறிக்கையிட்ட விசுவாச அறிக்கை இயேசுவின் பிறப்புடன் முடிந்து விடவில்லை, மாறாக இயேசுவை கோயிலில் அர்ப்பணித்ததுடன் முடியவில்லை, இயேசுவுக்கு பன்னிரண்டு வயதான போது கோயிலில் காணாமல் போய் கண்டுகொண்டதுடன் தன்னும் முடியவில்லை. சில வேளைகளில் மரியாளின் எண்ணங்கள் இப்படியாக ஓடிக்கொண்டு இருந்திருக்கலாம். ஆனால் அவளுடைய வாழ்வும், வாழ்வின் சகிப்புத் தன்மையும் அவளை தமது குமாரனாகிய இயேசுவின் சிலுவை வரை அழைத்துச் சென்றது. உலகத்தின் இரட்சகராகிய இயேசுவுக்கு துணை - இரட்சகராக வாழ்ந்து இயேசுவின் முதன்மையான சீடர் என்ற நிலையை அடைந்தாள். நம் அன்னையின் வாழ்வும், சிலுவை வரை சென்ற சகிப்புத் தன்மையும் இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவையான ஒன்றாக இருக்கின்றது. அதனால் தான் என்னவோ எமது தொடர் பயணத்தின் வழிபாட்டு ஆண்டை **'மரியன்னை ஆண்டாக'** பிரகடனம் செய்துள்ளனர்.

மனுக்குலத்தின் தாயாக சிலுவை அடியில் எம் ஒவ்வொருவரையும் தத்தெடுத்துக் கொண்ட போது (யோவா.19:25-27) தமது பணியின் நிறைவையும் தமது தாயின் சீடத்துவ பயணத்தின் நிறைவையும் உணர்ந்தவராய், இயேசு **'எல்லாம் நிறைவேறிற்று'** (யோவா.19:30) என்று கூறி தலை சாய்த்தார். சீடத்துவ வாழ்வுக்கும், நம்பிக்கை வாழ்வுக்கும் ஓர் உதாரண புருசராக திகழ்ந்து, ஏனைய சீடர்களையும் இணைத்து வாழ்ந்து காட்டினார். செப வாழ்விற்கும், ஆழமான ஆன்மீக செழுமைக்கும் உரம் கொடுப்பவளாக திகழ்ந்தாள் (தி.ப.1:14). கிறிஸ்தவ சீடர்களாகிய எம் ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும், விசுவாச பயணத்திற்கும் அன்னை எப்போதும் துணை நிற்கின்றாள். இந்த அசைக்க முடியாத நம்பிக்கையுடன் எமது வாழ்வுப் பயணத்தை எம் அன்னையிடம் ஒப்படைப்போம். நம்பிக்கை வாழ்வு முடிந்து விடும் பயணம் அல்ல, தொடர்ச்சியாக நடந்து, சிலுவை வரை சென்று, எல்லாம் நிறைவேறிற்று என்று எம்மை ஒப்படைக்கும் வரை நடந்து செல்வோம் - எம் அன்னையின் கரம் பற்றியவர்களாய்.

## மரியன்னை ஆண்டிற்கான செபம்

"தூய மரியாயே, இறைவனின் தாயாரே,
உலகிற்கு உண்மையான ஒளியாக இறைமகனாம்
இயேசுவைத் தந்தீரே, இறைவனின் அழைப்பிற்கு
உங்களை முழுமையாகத் தந்து அவருடைய
நன்மைத்தனத்தின் சுனையாக திகழ்ந்தீரே,
அம்மா! இயேசுவை எங்களுக்கு காட்டும்,
அவரிடம் எங்களை அழைத்துச் செல்லும்,
அவரை அறிந்து அன்பு செய்ய எங்களுக்கு
கற்றுத்தாரும். அவ்வாறாக நன்மைத்தனத்திற்காக
ஏங்கும் இவ்வுலகில் நாங்களும் உண்மையான
அன்பைப் பொழிபவர்களாகவும், உயிர்தரும்
நீரைச் சுரப்பவர்களாகவும் மாறுவோமாக. உமது
மகன் மீதான ஆழ்ந்த விசுவாசம் எம்மில் பெருக
எங்களுக்காக மன்றாடி உதவி புரிந்தருளும். அதனால்
நாங்கள் உம்மையும், உம்மோடு சேர்ந்து அவர்
ஆரம்பித்த திருச்சபையையும் அன்பு செய்வோமாக"
ஆமென்.




மரியாயே! எங்கள் நல்ல தாயாரே!!
எங்களுக்காகவும், எங்கள் குடும்பங்களுக்காகவும்
அனுதினமும் வேண்டிக் கொள்ளும்.

## திருத்தந்தை பிரான்சிஸ் பிலிப்பீன்ஸ் சமூகத்திடம் குழந்தையின் எளிமையில் செபிக்க வேண்டுகோள்



ஹையான் புயலின் கடும் பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் பிலிப்பீன்ஸ் மக்களின் செபம், குழந்தையின் செபம் போன்று இருந்தாலும்கூட, அவர்கள் சோர்வுறாமல் தொடர்ந்து செபிக்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உரோம் வாழ் பிலிப்பீன்ஸ் மக்களை, மனிலா கர்தினால் லூயிஸ் அந்தோணியோ தாக்லே தலைமையில், வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்காவில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ், அண்மையில் அந்நாடு எதிர்கொண்ட ஹையான் கடும் புயல் பற்றியும் குறிப்பிட்டார்.

நாம் புரிந்துகொள்ள இயலாத பல காரியங்கள் உள்ளன. சிறார் வளரத் தொடங்கும்போது பல காரியங்களை அவர்கள் புரிந்துகொள்பதில்லை, அதனால் அவர்கள் தங்கள் பெற்றோரிடம் அடுத்தடுத்து இறைவனின் குழந்தைகளாகி நாம், ஏன் என் செபத்தை, சிறப்பாக, துன்ப நேரங்களில் இச்செபத்தைச் செபிக்க வேண்டும் எனக் கூறினார்.

பிலிப்பீன்ஸ் புனிதராகிய Pedro Calungsodவின் திருவுருவத்தை வத்திக்கான தூய பேதுரு பசிலிக்காவில் வைப்பதற்கென இடம்பெற்ற நிகழ்வில் அந்நாட்டினரைச் சந்தித்து இவ்வாறு உரையாற்றினார் திருத்தந்தை.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட மொசேய்க் வேலைப்பாடு நிறைந்த இப்புனிதரின் திருவுருவம் வத்திக்கான் பசிலிக்காவுக்கு கீழ், திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களின் கல்லறைக்கு பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது.

புனித பேதுரு மொசேய்க் தொழிற்சாலையால் ஏறக்குறைய 600 விதமான கற்கள், அமைப்புகள் மற்றும் வண்ணங்களால் இத்திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

## முதியோர் நலனில் அக்கறை காட்டுங்கள்

இக்காலத்தில் திருச்சபையின் முதியோர் இன்றியமையாதவர்களாக இருக்கும்வேளை, அவர்கள் நலனில் அக்கறை காட்டுவதில் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் திருச்சபை எடுத்துக்காட்டாய்த் திகழ வேண்டும் எனக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். திருப்பீட நலவாழ்வுப் பணி அவை நடத்திய 28வது அனைத்துலக கருத்தரங்கில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் மற்றும் நோயாளர்களை திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், முதியோர் சில நேரங்களில் கடும் நோயின் பாதிப்பால் இருந்தாலும் கூட அவர்கள் எப்பொழுதும் முக்கியமானவர்கள் என்பதை வலியுறுத்தினார்.இருபதாம் நூற்றாண்டில் மனிதரின் ஆயுள்காலம் அதிகரித்துள்ளது, அதேசமயம், நினைவாற்றல் இழப்பு, நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசிய திருத்தந்தை, இவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவிகளுடன், இவர்களின் மாண்பும், சுதந்திரமும் மதிக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படுமாறும் கேட்டுக்கொண்டனர்.

இந்த நோயாளிகளின் புலனுணர்வு சக்திகள் குறைந்தோ அல்லது எதுவுமே இல்லாமல் இருக்கும்போது கூட இவர்களுக்கு சமய மற்றும் ஆன்மீக உதவிகள் வழங்கப்படுமாறும் திருத்தந்தை வலியுறுத்தினார்.முதியோர், நற்செய்தியைப் பெறுபவர்களாக மட்டும் இல்லாமல், அவர்கள் பெற்றுள்ள திருமுழுக்கால் நற்செய்தியை அறிவிப்பவர்களாகவும் உள்ளார்கள் என்றும், இவர்கள் தங்கள் குடும்பங்கள், பங்குகள், இன்னும் தாங்கள் வாழும் சூழல்களில், குறிப்பாக இளையோர் மத்தியில் தினமும் நற்செய்தியை அறிவித்து இயேசுவுக்குச் சாட்சிகளாக வாழுமாறும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அல்செய்மர் என்ற நினைவாற்றல் இழப்பு நோயால் மட்டும் இந்த உலகில் 3 கோடியே 50 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஒவ்வொரு நாளும் 77 இலட்சம் பேர் புதிதாகப் பாதிக்கப்படுகின்றனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.




## 02ம் பக்கம் – மொழி என்பது...

இவ்வாறு கடந்த 8ஆம் 9ஆம் திகதிகள் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா விழாவின் முதல் நாள் நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றும்போது மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், மன்னார் மறைமாவட்ட கலையருவி இயக்குனருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார். மட்டக்களப்பு தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய தமிழ் நேசன் அடிகளார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

உலக வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப்பார்த்தால் ஒரு உண்மை நமக்குத் தெளிவாகும். அதாவது ஒரு இனத்தை அழிக்கவேண்டும் என்றால் எதிரிகள் முதலில் அந்த இனத்தில் மொழியை அழித்திருக்கின்றார்கள். மொழி அழிந்தால் ஒரு இனம் தானாகவே அழிந்துவிடும்

மொழி என்பது ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு தன் பண்பாட்டை எடுத்துச் செல்லும் வழி. தமிழர்களாகிய நம்மைப் பொறுத்தவரை தமிழ் மொழி என்பது வெறும் "வழி" மட்டுமல்ல, அதுதான் நமது"விழி." ஏனென்றால் இரண்டாயிரம் ஆண்டுகால தமிழின் எழுச்சி, வீழ்ச்சி " தமிழின் வெளிச்சம், இருட்டு " தமிழின் மேடு, பள்ளம் இவற்றை உற்றுப்பார்த்தால் ஒரு உண்மை புலப்படும். அதாவது தமிழனின் மொழிக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித்தளங்கள் ஆட்டம்கண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தமிழுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த ஓர் கத்தோலிக்க குரு. அவருடைய தமிழ்ப்பணிகள் ஈடுஇணையற்றவை. அவருடைய தமிழ்ப் பணிகளை மதிப்பீடு செய்த அறிஞர்கள் அவரைப் பற்றி கூறும் வார்த்தைகள் உண்மையில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. "தமிழை உலக வரைபடத்தில் பொறித்தவர் தனிநாயகம் அடிகளார்." "புலவர்களுக்குள்ளும் பண்டிதர்களுக்குள்ளும் முடங்கிக் கிடந்த தமிழை தனிநாயக அடிகளார் உலக அரங்கில் ஏற்றிவைத்தார்! "இருபதாம் நூற்றாண்டில் இவரைப்போல் உலகளாவிய தமிழ்ப்பணி புரிந்தவர் வேறெவருமில்லை!" இந்த வார்த்தைகளை மேலோட்டமாகப் பார்த்தால் சிலவேளை மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகளாகத் தெரியும். ஆனால் தனிநாயகம் அடிகளாரின் பரந்த தமிழ்ப்பணிகளை ஆழமாக நோக்கினால் இந்த வார்த்தைகள் உண்மையான வார்த்தைகள் என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்வர்.

# அமலோற்பவத் திருநாள் கூறும் அர்த்தமுள்ள படிப்பினைகள்

அம்மா என்று கேட்டாலே நம் மனம் குளிரும், மகிழ்வடையும், உலகின் எந்த மொழியிலும் மேன்மையான சொல்தான் அம்மா என்பது. குழந்தை முதன் முதலாகச் சொல்வது அம்மா. வேதனை மகிழ்ச்சி இடறலின்போது அறியாமலேயே நாம் சொல்வதும் அம்மா என்றுதான்.

இறை அன்பை வெளிப்படுத்த தாய் அன்பைத் தானே உவமையாகச் சொல்ல முடியும். பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கியவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். (எசா 49:15)

### உயர்ந்தவர் பலர் தங்கள் தாயன்பைப் பற்றி எழுதியுள்ளனர்.

- ☆ ஆபிரகாம் லிங்கன் தாம் வாசித்த மாபெரும் நூல் தம் தாய்தான் என்று எழுதியுள்ளார்.
- ☆ படிப்பில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த தாமஸ் ஆல்வா எடிசன் பெரிய அறிவியல் மேதையாகத் திகழ தமது தாயின் ஊக்கமும் ஆர்வமும்தான் காரணம் என்றார்.
- ☆ உலகு சார்ந்த வாழ்க்கையைக் கைவிட்டு ஆன்மீக உயர்ச்சிக்கு வளர்ந்த மாபெரும் புனிதரான அகுஸ்தீனார் தமது மாற்றத்திற்கு தமது தாயான புனித மோனிக்காவின் கண்ணீரும், செபமும், தியாகமும், தாயின் இதய இரத்தத்தைப் பலியாகக் கொடுத்ததும்தான் காரணம் என்றார்.

அம்மா தியாகத்தின் அடையாளம். மண்ணில் விழுந்து அழியும் கோதுமையைப் போன்றவர் அவர். தனது குஞ்சு வாழ வேண்டும் என்பதற்காகத் தன் இதய இரத்தத்தைக் கொடுக்கும் பெலிக்கன் பறவை கவிஞரின் கற்பனையாக இருக்கலாம். ஆனால் அது தன் பிள்ளையின் வளர்ச்சியைக் கண்டு மகிழும் தாய்க்கான அடையாளமாக விளங்குகின்றது.

கிறிஸ்துவின் சீடருக்கு வழிகாட்டியாக, எடுத்துக்காட்டாக, திருச்சபையின் பாதுகாவலாக மாதா உள்ளார். இறை மகனைப் பெற்றெடுத்தவர், திருச்சபையின் தொடக்கத்தின் போதும் முன்னிலை வகித்தார். அவரது இதயம் தாயின் பால் கருணையால், இரக்கத்தால், பரிவால் நிறைந்துள்ளது.

பிறரது வேதனையைத் தமது வேதனையாகவும், பிறரது வறுமையைத் தமது வறுமையாகவும் கண்டவர் மாதா. கானாவூர்த் திருமண வீட்டிற்கு விருந்தினராகச் சென்றவர் அவ்வீட்டிற்குச் சிறுமை ஏற்படும் என்ற கட்டத்தில் அந்த வீட்டைச் சேர்ந்தவராக மாறினார். மாதா தாம் எல்லாக் குடும்பங்களுக்கும் அடைக்கலம். மரியா என்பது அரமேய மொழியில் மிரியாம் ஆகும். அதற்கு *'இறைவனிடம் உயர்த்தப்பட்டவள்'* என்று பொருள்.

கர்தினால் நியூமான் ஆங்கிலிக்கன் சபையிலிருந்து கத்தோலிக்க திருச்சபைக்கு வந்தவர். இதைப் பற்றி அவர் இவ்வாறு கூறியுள்ளார். தாய் இல்லாத குடும்பத்திலிருந்து தாய் உள்ள குடும்பத்திற்கு வர விரும்பினேன். கத்தோலிக்கத் திருச்சபை தாய் உள்ள குடும்பமாகும். இறை மகனைத் தம் திரு வயிற்றில் சுமந்து நடமாடும் நற்கருணைப் பேழை அல்லவா மாதா!

சிலுவையில் அறையப்பட்ட நிலையில் ஆண்டவர் இயேசு மனிதர் அனைவரின் பிரதிநிதியான புனித யோவானிடம், *'இதோ உன் தாய்'* என்றும், தமது தாயான மரியாவிடம், *'அம்மா இதோ உம் மகன்'* என்றும் கூறினார். அவர் தமது தாயை இவ்வுலகில் அனாதையாக விட விரும்பவில்லை. தமது அன்புச் சீடரான யோவானிடம் அவர் தம் தாயை ஒப்படைத்தார். ஆண்டவர் தம் உயிரைக் கையளித்த வேளையில் அவரது கண்கள் மூடுவதற்கு முன் அவரது பார்வையில் கடைசியாகப்பட்டவர்கள் மாதாவும் யோவானும்தான்!

அருள் நிறைந்தவரே, அருள் மிகப்பெற்றவரே என்று தலைமைத் தூதருள் ஒருவரான புனித கபிரியேல் உலகில் மாதாவை மட்டும்தான் அழைத்துள்ளார் (லூக் 1:29) ஒப்பற்ற பணிவும் கீழ்ப்படிதலும்தான் மரியாவை இறைவனின் அன்னையாக்கியது. நான் ஆண்டவரின்



அடிமை (லூக் 1:38) மாட்டுத் தொழுவத்தில் ஆரம்பித்த மீட்புப்பணி கல்வாரியில் நிறைவு பெற்றபோது தொடக்கம் முதல் இறுதிவரை, சிலுவையின் அருகில் இருந்தவர் மாதா.

மகன் சிலுவையைச் சுமந்தார். மாதா மனதில் சிலுவையைச் சுமந்தார். *'உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்'* (லூக் 2:35) என்று சிமியோன் சொன்னதை மாதா தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். திருவிவிலியத்தில் முழுவதுமாக மறைந்திருக்கும் பிரசன்னம்தான் மாதா. உண்மையான நண்பர்களைத் துன்ப நாட்களில் புரிந்துகொள்ள இயலும். நமது துன்பத்தின் போது நமக்குத் துணை செய்பவர் மாதா!

திவ்விய நற்கருணையின் வழிகாட்டிதாம் மாதா. 33 ஆண்டுகள் இயேசுவைக் கண்டறிந்து, தொட்டுணர்ந்த, கருத்தரித்து வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து, பாதுகாத்து பேணிக்காத்து, போற்றி வளர்த்தது மாதா அல்லாமல் வேறு யாா? இயேசு கிறிஸ்து தமது உடலையும் இரத்தத்தையும் வளர்த்திட தாய்ப்பாலை பெற்ற மாதாவின் உடலை அழிய விடுவாரா? *'சென்ப பாவம் இல்லாமல் அமலோற்பவ மாதாவாகப் பிறந்தவர்'* விண்ணிற்கு அல்லாமல் வேறு எங்கு உயர்த்தப்படுவார்?

## 01ம் பக்கம் – நாயககந்ததை

காணிக்கை மாதா ஆலய பங்கு மக்கள் அனைவரினதும் வரவையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும் இப் பணியானது வடக்கிற்கும் தெற்கிற்குமிடையில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்பும் கருவியாக அமையும் எனவும் தெரிவித்தார்.

## 01ம் பக்கம் – உயர் மறைமாவட்டத்தால்

மறைப்போதனைகளை சித்தரிக்கும் குடில்கள் நடுவர்களின் கவனத்தை ஈர்க்கும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும். இரு பிரிவிலும் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே தலா ரூபா 100,000/=, ரூபா 50,000/=, மற்றும் ரூபா 25,000/= என மூன்று பரிசில்களும், மேலும் 5 ஆறுதல் பரிசில்களாக ரூபா 5000/= உம் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

அருட்தந்தை உதயதாஸ் அடிகளார் 071 8563646

அருட்தந்தை கியான் குணதிலக்க 071 6842848 மற்றும்

அருட்தந்தை அன்ரன் தினேஷ் 077 54058841

அடிகளார்களோடு தொடர்பு கொள்ளவும்.

## 07ம் பக்கம் – இலங்கை திருச்சபை

சகோதரர்கள் இருவருக்கிடையில் அதாவது புவனேகபாகு மற்றும் மயாதுன்னைக் கிடையில் அவர்களது தந்தையை கொன்றதன் பின்னர் ஏற்பட்ட கலவரமும் சண்டையுமே ஆகும்.

இதன்போது மாயாதுன்னை இந்தியாவில் கலிகட்டில் இருந்து அராபியத் தலைவரான சமொறினினுடைய உதவியை நாடியபோது புவனேகபாகு தனக்கு அருகிலிருந்த போர்த்துக்கே யருடைய உதவியைப் பெற்றுக் கொண்டான்.

இவ்வாறு இரண்டாகப் பிரிந்த அரசர்களே எமது நாட்டைக் காட்டிக்கொடுத்தனர் என்றே கூறலாம். இராயாவலிய எனப்படும் இராச வம்சக் கதையில் இந்த புத்திசாலித்தனமற்ற நடவடிக்கையால் போர்த்துக்கேயர் அரசருக்கு தீங்கு இழைத்தனர். பின்னர் வந்த பரம்பரையினர் அனுபவித்த எல்லா கொடுமைகளுக்கும் பதி ல் சொல்ல வேண்டிய கடமை புவனேகபாகு அரசருக்கே என எழுதப்பட்டுள்ளது.

இங்கு கூறப்பட்டுள்ள வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் போர்த்துக்கேயர் இந்நாட்டில் தமது அதிகாரத்தை ஏற்படுத்தியது 1597களிலேயே ஆகும். இதுவும் இரண்டாகப் பிரிந்த அரசர்களினாலேயாகும். இது இன்று எமக்கு நல்லதொரு பாடமாக அமைகிறது

## 02ம் பக்கம் – சாய்ந்தது...

தன்னில் விதைத்துவிட்டு செல்வது சாலச் சிறந்ததாகும். கிறிஸ்து தன் திருத்தூ-தரை பயிற்றுவித்து “உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என்று, கூறிச் சென்றாரோ, அதேபோல் அருட்சகோதரியும் கிறிஸ்துவின் தாழடி பின்சென்று “மனந்தளராது சவால்களை வென்று மறையாசிரியர் பணி ஆற்றிடுங்கள் என்று மறைப்பணியாளர்களை ஊக்குவித்து தைரியப்படுத்திச் சென்றுள்ளார்.

உம் பணியின் விதை

செல்வி. பிளிசியா பெர்னான்டோ(சிலாப மறைமாவட்டம்)

## 08ம் பக்கம் – இவர்கள் பார்வையில்..

**கர்தினால் பிராடி – அயர்லாந்து நாட்டின் தலைமை ஆயர் :**

இறைவனின் பேரருட் கருணையில் திருத்தந்தை பிரான்சிஸ் கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையை, அவர் தெரிவு செய்துள்ள விருதுவாக்கு தெளிவாக்குகிறது.

**பிரேசில் நாட்டு ஆயர் ஒருவர் :**

மேய்ப்புப் பணிக்கென தன்னை வழங்கும் ஒரு திருத்தந்தையை நாம் பெற்றுள்ளோம்.

**ஜோசே இராசியானோ தெ சில்வா – ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனமான குயுஒவின் தலைமை இயக்குனர் :**

வலுவிழந்த, குரலிழந்த குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் சார்பாக, திருத்தந்தை பிரான்சிஸ் குரல் கொடுப்பார் என்று நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

எமது பத்திரிகையின் “நத்தார் சிறப்பிதழை”
உங்கள் ஆக்கங்களான கட்டுரை, சிறுகதைகள்
கவிதைகள் மற்றும் நத்தார் பற்றிய சிறப்புத்
தகவல்கள் ஆகியவற்றினால் அலங்கரிக்க இதோ
உங்களுக்கோர் சந்தர்ப்பம்
எனவே உங்கள் கலைத் திறமைகளையும்,
தகவல்களையும் எமக்கு 05.12.2013க்கு முன்னதாக
அனுப்பிவையுங்கள்.
சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு
நத்தார் சிறப்பிதழில் வெளியிடப்படும்



**ஆசிரியர்**
**ஞான ஒளி**
**"நத்தார் சிறப்பிதழ்"**
**இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை**
**பொரள்ளை, கொழும்பு – 08**

## 04ம் பக்கம் – இளைஞர்களின் வழிகாட்டி

ஒருவேளை மிகவும் வேதனையுற்றிருக்கும் தன் தாய்க்கு ஆறுதல் கூற வீட்டிற்குள் சென்றிருக்க வேண்டும்.

வேதனையுற்ற தோபித்து இறை வேண்டுதல் வழியாக தெளிவு பெறுகிறார். காரணம் தொடர்ந்து வரும் விவிலியப் பகுதியில், தோபித்து வீட்டின் முற்றத்திலிருந்து எழுந்து வீட்டிற்குள் வந்து (3:17), தன் மகனை அழைத்து அறிவுரை வழங்குகின்றார் (4:3) என்று விவிலிய ஆசிரியர் நமக்கு விவரிக்கிறார். இதன் மூலம் நாம் செய்யும் ஒவ்வொரு இறை வேண்டலும் நம் வாழ்வின் இக்கட்டானச் சூழலில் வழிநடத்தும் என்பதை அறியலாம்.

தோபியா எல்லா நிகழ்வுகளையும் கவனித்திருக்க வேண்டும். தன் தந்தையின் முறையீடு, அதற்கு தாயின் கடின சொற்கள், தன் தந்தையின் இறைவேண்டல் அனைத்தையும் பார்த்த தோபியா, தன் தந்தை அழைத்தவுடன் உடனடியாகப் போய் அவரின் அறிவுரையைக் கேட்கிறார். சீஞா 22:7 நல்லப் பிள்ளைகளைப் பற்றி இப்படிக் கூறுகின்றது. **“நல்வாழ்க்கை வாழப் பயிற்றுவிக்கப் பெற்ற மக்கள் தங்கள் பெற்றோரின் இழிபிறப்பை மறைத்துவிடுகிறார்கள்”** நல்ல இளைஞர் தோபியா தன் தந்தை அழைத்தவுடன் செல்கின்றார். இதன் மூலம் தந்தைக்கு கீழ்ப்படிதலுள்ள மகனாகத் திகழ்ந்தார் என்பதை அறிகிறோம்.

அடிக்கடி சண்டையிடும் பெற்றோருக்கு ஓர் எச்சரிக்கை. பிள்ளைகள் சண்டையிட்டுக் கொள்ளும் பெற்றோரை வெறுப்பதாக சமீபத்து ஆய்வுகள் கூறுகின்றன. தேவையற்ற சந்தேகம், தேவையற்ற விவாதங்கள் தேவையற்ற குடிப்பழக்கங்கள் இவை பல்வேறு குடும்பங்களில் கணவன் மனைவியருக்கிடையே சண்டை வருவதற்கான காரணங்களாக அமைகின்றன. அடிக்கடிச் சண்டையிடும் பெற்றோரைக் காணும் பிள்ளைகள் பயம், வெறுப்பு, கவலை போன்ற உணர்வுகளை அதிகமாக வளர்த்துக்கொள்கின்றனர். படிப்பிலோ, நல்லொழுக்க வாழ்விலோ பிடிப்பில்லாமல் போகின்றனர். மன நிலையிளவில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, சமுதாய வாழ்வில் தோல்விகளைத் தழுவும் பிள்ளைகளாக மாறுவதற்கு அதிகம் வாய்ப்பு ஏற்படுகின்றது.

வேதனையும், அவமானமும் உற்ற தோபித்து, இறை வேண்டல் செய்து மாற்றம் காண்கிறார். தன் மகன் தோபியாவை அழைத்து மேதியா நாட்டின் இராகியில் வாழ்ந்த கபேலிடம் கொடுத்து வைத்திருந்த பணத்தைப் பற்றிப் பேசுகிறார். தந்தை தோபித்து தன் மகனை அழைத்தவுடன் அவரிடம் வருகின்றார். பணத்தைப் பற்றிக் கூறுமுன் தோபித்து தன் மகனுக்கு நீண்ட அறிவுரைக் கூறுகிறார் (4:3)

இன்றைய சூழலில் அறிவுரை என்றால் ஆறு மைல் தூரம் தள்ளிப்போகும் போக்கு வளர்ந்துள்ளது. அதே நேரத்தில் இலவசமாக எங்கும் கிடைப்பதும் இந்த **“ஆலோசனை / அறிவுரை”** மட்டும்தான் **“நல்லார் வாக்கைக் கேட்பதும் நன்று”** என்ற கூற்றை ஏற்றுக்கொள்வோர், நன்மைதரும் நலம் பயக்கும் எதையும் எங்கிருந்து வந்தாலும் திறந்த மனநிலையுடன் ஏற்றுக்கொள்வர். இதற்கு முரணாக திறந்த மனநிலை இல்லையேல் எதையும் ஏற்க முடியாது.

தனிப்பட்ட மனிதருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நலம் பயக்கும் **“அறிவுரைப் பகுதிகளை”** விவிலியம் கொண்டுள்ளது. இவ்விலக்கியத் தன்மை ஞான நூல்களுக்கு உரியதாகும். அறிவுரைப் பகுதிகளில் தனிப்பட்ட மனிதர்களுக்கென்று கொடுக்கப்பட்டவற்றில் தலை சிறந்த பகுதியை தோபித்து தன் மகன் தோபியாவுக்கு வழங்கியப் பகுதி கொண்டுள்ளது. ஞான நூல்களில் காணப்படும் அறிவுரைப் பகுதிகளுக்கு ஈடாக இது பார்க்கப்பட வேண்டும் (எ.கா ஆகூரின் மொழிகள் நிமொ 30:1-33), 31:1-31) மேற்கூறிய ஆகூரின் மற்றும் இலமுவேலின் தாயின் அறிவுரைகளின் சாராம்சத்தை தோபித்து நூல் முழுமையாக வெளிப்படுத்துகின்றது என்ற பார்வையுடன் கண்ணோக்கிடலாம்.

தோபித்து தன் மகன் தோபியாவுக்கு வழங்கிய அறிவுரைப் பகுதி, இன்றைய இளைஞர்களுக்கு எப்படி வழிகாட்ட முடியும் என்பதைத் தொடர்ந்து காண்போம். (தொடரும்...)


**கொழும்பு உயர் மறைமாவட்ட குடும்ப நல மறைப்பணி உங்களுக்கு வழங்கும்**

**திருமண குடும்ப நலக் கல்வி**

பெற்றோருக்கு, திருமண தம்பதியருக்கு, இளைஞர், யுவதிகளுக்கு

வளமான நலமான வெற்றிகரமான வாழ்வை நோக்கிச் செல்ல...

வழிநடத்துபவர் : அருட்தந்தை பிரகாஷ் பர்னாந்து அடிகளர்

| | | |
|---|---|---|
| இடம் | : | 6ஆம் சின்னப்பர் நடுநிலையம் (6ம் மாடி) மல்வத்தை தெரு, கோட்டை, கொழு - 01 |
| ஆரம்பம் | : | 06.01.2014 தொடக்கம் தொடர்ந்து 25 வாரங்கள் |
| நேரம் | : | திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு |
| மொழி | : | தமிழ் |

இதற்கான அனுமதிப்பத்திரத்தை செக்கடித் தெரு புனித ஆரோக்கியமாதா ஆலய காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்க வேண்டிய இறுதித் திகதி : 06.12.2013

தொடர்புகொள்ளவும்
அருட்பணி. பிரகாஷ் பர்னாந்து
குடும்ப நல மறைப்பணி கல்வி
புனித அன்னம்மாள் ஆலயம்
121, செக்கட்டித்தெரு, கொழும்பு - 13.
தொ.பே. இல : 0112431460,
0112446845, 0773483788

| கல்வித் தகமை : | பயிற்சிக் கட்டணம் |
|---|---|
| க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்தியிருத்தல் | (தவணை முறையில்) ரூபா 5000/- |

(Q 13N5982)



"A wise man which built a house and digged deep, and laid the foundation on a rock"
(Luke 6:48-49)

Experts in building and renovations



To start a new house.
To modify the old house
To complete the half built house

Start today, Call now.

NILE HOMES
And Constructions - Kadawatha
0777-796838 / 072-7796838
E-mail: nilehomes@yahoo.com
www.nilehomes.lk

(N3212) (Q 13N6004)


## 12ம் பக்கம் – இறை ஊழியர் அன்னை....

உள்ளத்துடன் அனைவரையும் அரவணைக்க வேண்டும் என்ற மனப்பக்குவம் அவரிடத்தில் எழுந்தது.

அன்னை அவர்கள் சக சகோதரிகளுடனும் ஏனைய மக்களுடனும் தாயன்புடனும், அரவணைப்புடனும் வாழ்ந்த நல்லதொரு ஒற்றுமையான உறவையும் வளர்த்துக் கொண்டார். அதுமட்டுமன்றி தனது வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப ஏழ்மையில் திளைத்து, தனது வேலைகளில் கடமையுணர்வுள்ளவராகவும் திகழ்ந்தார். வெற்றுக் கரங்கள் ஆண்டவருடைய பலத்தாலும் சக்தியாலும் நிறைந்துள்ளது என்பதை நம்பி வாழ்ந்தார். இத்தகைய ஓர் ஆன்மீகம் நிறைந்த அன்னை 1863ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி விண்ணகம் சென்றார். இன்று அன்னையவர்களின் விண்ணகப் பிறப்பின் 150வது ஜனனத்தை கொண்டாடுவதில், திருச்சிலுவை கன்னியர்களாகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

இன்று உலகிலே நான்கு கண்டங்களில் ஏறக்குறைய பதினொன்றிற்கும் மேற்பட்ட நாடுகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அருட்சகோதரிகளும், எம் இலங்கைத் தாய்நாட்டில் ஒன்பதிற்கு மேற்பட்ட மறைமாவட்டங்களில் நூற்றிபன்னிரண்டு அருட்சகோதரிகளும் பரந்து விரிந்து பணியாற்றி வருகின்றோம். நாம் மருத்துவப்பணி, தாதியர் பயிற்சி, கற்பித்தல் பணி, வயோதிபர் பராமரிப்பு, சிறுவர் பராமரிப்பு, பாலர் பாடசாலைகள், பெற்றோரை இழந்த பிள்ளைகளை பராமரித்தல், இளம் பெண்களைப் பராமரித்தல், மறைக்கல்வி கற்பித்தல், ஆன்மீகப்பணி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் சமூகசேவைகள் போன்ற பணிகளில் சேவையாற்றி வருகின்றோம். நாம் அனைவரும் எமது ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்ள ஓர் முன்னுதாரணமாகத் திகழ்பவர் எம் அன்னை போர்னாடா அவர்கள். அன்னை விண்ணகம் சென்று நூற்றிஐம்பது ஆண்டுகள் கடந்தாலும் அன்னையின் வாழ்க்கை விழுமியங்கள், ஆன்மீகம் எம் வாழ்விற்கு பசும்புற்களாகவே திகழ்கின்றன.

அன்னையவர்கள் தனது குழும வாழ்வில் தனது சகசகோதரிகளுக்கு முன்மாதிரிகையாகக் கூறிய, பின்பற்றிய வார்த்தைகள் இன்று பொன் எழுத்துக்களால் தீட்டப்பட வேண்டியவை. இவை இன்றும் எமது நெஞ்சைத் தொடுகின்றன. அன்னை தன் சகாக்களுக்கு அடிக்கடி கூறுவார் **‘வெற்றுப் பாத்திரங்களாக இருந்த எம்மில் ஆண்டவர் இயேசு உறைவிடம் கொண்டுள்ளார்”. ‘நாம் எப்போதும் ஆண்டவருடைய படைப்பில் படைத்தவருடைய சாயலைக் காணவேண்டும்”. ‘இன்னும் எம் வாழ்நாளில் ஒவ்வொரு புதிய நாட்களும் ஆண்டவருடைய அன்பில் புதுப்படைப்பாக மாறவேண்டும்”. ‘எமது வாழ்வு ஆண்டவரில் தான் மகிழவேண்டும்”** போன்ற நெஞ்சுருகும் வார்த்தைகள் இன்றும் பல அன்னை போர்னாடாக்களை உருவாக்க வல்லது. ஈற்றில் அன்னை கூறினார் **‘எமது திருச்சிலுவை கன்னியர் சபையானது ஆண்டவர் இயேசுவின் ஆசி பெற்று, என்றும் நிறைந்திருக்கும் சபையாக திகழ வேண்டும் என்பதே தமது விருப்பம்”.** இத்தகைய ஓர் அன்னையைத்தான் இற்றைக்கு நூற்றிஐம்பது ஆண்டுகள் முன் திருச்சிலுவை கன்னியர் சபை இழந்துள்ளது. ஆயினும் அன்னையின் போதனைகள், ஆன்மீக வாழ்க்கை முறை யாவும் இன்றும் எம் சபையில் எதிரொலிக்கின்றன.

இன்றைய நாளில் இடம் பெறும் அனைத்து நிகழ்வுகளையும் அன்னை போர்னாடாவின் ஆன்ம சாந்திக்காகவும், அவர் வெகுவிரைவில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவும் வேண்டுவதுடன், தொடர்ந்தும் மங்கா புகழுடன் திருச்சிலுவை கன்னியர் உலகசாட்சிகளாக வாழவும் வேண்டி அர்ப்பணிக்கிறோம். 13.12.2013 அன்று யாழ் புனித மரியாள் பேராலயத்தில் இடம் பெறவிருக்கும் நற்கருணை வழிபாட்டிலும் தொடர்ந்து அடுத்த நாள் 14.12.2013 நடைபெற இருக்கும் திருப்பலியிலும், கண்காட்சி நிகழ்வுகளிலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

# போப்பிட்டிய புனித நிக்கலஸ் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா

## மார்கழி மாதம் 08ஆம் திகதி, 2013



கொடியேற்றம் : கார்த்திகை மாதம் 28ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு

நவநாட்கள் : கார்த்திகை மாதம் 28ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 06ஆம் திகதி வரை மாலை 7.00 மணிக்கு நவநாளும், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

✷ **மார்கழி மாதம் 05ஆம் திகதி வியாழக்கிழமை**

பிள்ளைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட தினம், அன்றைய தினம் காலை 6.30, காலை 8.00, காலை 10.30 மணி, மாலை 7.00 மணிக்கும் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**மாலை 4.30 மணிக்கு திருப்பலி (தமிழ் மொழியில்)**

✷ **மாலை ஆராதனை :** மார்கழி மாதம் 07ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

✷ **மார்கழி மாதம் 08ஆம் திகதி**

திருவிழா திருப்பலி காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்

**அன்றைய தினம் திருப்பலிகள் :**

காலை 5.00 மணிக்கு (சிங்களம்) நண்பகல் 12.00 மணிக்கு (தமிழ்) மாலை 5.00 மணிக்கு, மாலை 7.00 மணிக்கு (சிங்களம்)

மேலதிக விபரங்களுக்கு அருட்பணி எறிங்டன் சில்வா

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

## விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம்<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |
| வர்ணம் + 25 % | | |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |
| வர்ணம் + 25 % | | |

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்களுக்கும்
ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 7750/=<br>15500/=<br>31000/= | 7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | 11500/=<br>23000/=<br>46000/= | 10000/=<br>20000=<br>40000/= |
| வர்ணம் + 25 % | | |

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.



## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்